ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2393 - 2024 ජූලි මස 12 වැනි සිකුරාදා - 2024.07.12

*2393 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 5184 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 5199 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, ஒகத்து மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, யூலை மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024, ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1581-B 82588-5,441 (2024/07)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலுாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
   (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
   (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
   (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
      (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
      (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
   (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
   (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
   (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
   (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
   (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
   (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
   (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
   (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
   (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
   (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு

*நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சின் தொழில் நியாய சபைகள் செயலாளர் அலுவலகத்தின் தொழில் நியாய சபைகள் உதவிச் செயலாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2024*

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் தொழில் நியாய சபைகளில் வெற்றிடம் நிலவுகின்ற 20 உதவிச் செயலாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தகுதிவாய்ந்த இணைந்த சேவைக்கு உரித்தான முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் தரம் I இன் உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் வலைத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், தொழில் நியாய சபைகள் செயலாளர் அலுவலகம், இலக்கம் 19, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10" என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தொழில் நியாய சபைகள் செயலாளர் அலுவலகத்தின் தொழில் நியாய சபைகள் உதவிச் செயலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்" எனத் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2024.08.12 ஆந் திகதியாகும்.

விண்ணப்பங்களினை இணைந்த சேவையிலுள்ள முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் தரம் I இன் உத்தியோகத்தர்களுக்கு மட்டுமே இப்பதவிக்காக விண்ணப்பிக்க முடியும்.

**குறிப்பு** : விண்ணப்பமொன்று அல்லது அது சம்பந்தப்பட்ட ஆவணமொன்று அஞ்சலில் காணாமற் போனதாக அல்லது தாமதமாகியதாக செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது. இறுதித் தினம் வரை விண்ணப்பங்களைத் தாமதம் செய்வதனால் ஏற்படக்கூடிய நட்டங்கள் விண்ணப்பதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

01. நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சின் செயலாளரால் விண்ணப்பங்கள் கோரப்பட்டு, அவ்வமைச்சின் செயலாளரால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவினால் கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சை நடாத்தி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

02. **பதவியின் தன்மை :**

இந்நியமனம் நிரந்தரமானதும், ஓய்வூதியமுடையதுமாகும்.

03. **சம்பள அளவுத்திட்டம்** : MN 02-2016 ரூபா 28,940-10 × 300 - 11 × 350 - 10 × 560 - 10 × 660 - ரூபா 47,990.00

04. **அடிப்படைத் தகுதிகள்** : இணைந்த சேவையின் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பதவியில் தரம் I இன் உத்தியோகத்தராக இருத்தல்.

05. **தெரிவு செய்யும் முறைமை** : கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின் புள்ளிகளின்படி திறமை வரிசையடிப்படைக் கேற்ப நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கும் ஒழுங்குமுறை, வெற்றிடம் நிலவுகின்ற தொழில் நியாய சபைகளின் தகவல்கள் மற்றும் முன்னோடி விண்ணப்பப் படிவத்தினை நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் (www.moj.gov.lk) வெளியிடப்பட்டுள்ளது.

06. விண்ணப்பப் படிவத்துடன் தொடர்பான தகவல்கள் தமது கையெழுத்தால் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். அனைத்து வகையிலும் பூரணமாகாத, அடிப்படைத் தகுதிகள் அற்ற நியமித்த தினத்திற்கு பின் கிடைக்கப்பெறும் மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒத்திராத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தல்களுமின்றி நிராகரிக்கப்படும். உரிய விண்ணப்பப் படிவத்தின் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்வது பயனுடையதாகும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்துக்கு இணைப்புடையதானதா என்பது பற்றி விண்ணப்பதாரிகள் பரீட்சித்துக்கொள்ள வேண்டியதுடன் அவ்வாறில்லையெனின் விண்ணப்பம் நிராகரிக்கப்படுமென மேலும் தெரிவிக்கின்றேன். விண்ணப்பப்பத்திரமானது இத்துடன் இணைக்கப்பட்டுள்ள முன்னோடி விண்ணப்பப் பத்திரத்திற்கு ஏற்ப தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பப் பத்திரம் கிடைக்கப்பெற்றது பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

சகல விண்ணப்பங்களும் தாங்கள் தற்போது சேவையிலுள்ள நிறுவனத் தலைவரினூடாக அனுப்பப்பட வேண்டும்.

07. இங்கு குறிப்பிடப்படாத விடயமொன்றெனில், அத தொடர்பாக நீதி. சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளரினால் முடிவு எடுக்கப்படும். சகல விண்ணப்பதாரர்களும் இவ்விண்ணப்பம் கோரப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான சட்ட விதிகளுக்கு ஏற்ப செயற்பட கடப்பாட்டினையுடையவர்களாவர்.

08. இங்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழி மூலமான அறிவித்தல்களில் ஏதேனும் முரண்பாடு காணப்படுமிடத்து அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியிலான அறிவித்தலின் பிரகாரம் செயற்படல் வேண்டும்.

எம். என். ரணசிங்க,
செயலாளர்,
நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு
மறுசீரமைப்பு அமைச்சு.

2024, யூன் 28.

இல. ..........................................
(அலுவலக உபயோகத்துக்காக)

| | | |
|---|---|---|
| மொழிமூலம் | சிங்களம் | |
| | தமிழ் | |

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு**

தொழில் நியாய சபைகள் செயலாளர் அலுவலகத்தின் தொழில் நியாய சபைகள் உதவிச் செயலாளர் பதவிக்கான விண்ணப்பம்

01. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களம்/தமிழில்) : ..........................................................................................
..........................................................................................

முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) : ..........................................................................................
..........................................................................................

(ஆ) முழுப் பெயர் (சிங்களம்/தமிழில்) : ..........................................................................................
..........................................................................................

முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :..........................................................................................
..........................................................................................

02. நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :..........................................................................................
..........................................................................................

03. நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :..........................................................................................
..........................................................................................

04. தபால் முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :..........................................................................................

(நிரந்தர முகவரி மாறுபடுமாயின் மாத்திரம் பூரணப்படுத்தவும்.) ..........................................................................................

05. தொலைபேசி இலக்கம்: தனியார் : .................................................. அலுவலகம் : ..................................................

06. மின்னஞ்சல் முகவரி :..........................................................................................

07. தேசிய அடையாள அட்டை இல. : | | | | | | | | | | | |

08. ஆண்/பெண் நிலை :..........................................................................................

09. பிறந்த திகதி : வருடம் :.................................... மாதம் :................................................ திகதி :.............................

10. இனம் :..........................................................................................

11. விவாகமானவரா/விவாகமாகாதவரா :..........................................................................................

12. தற்போது சேவை புரியும் இடம் மற்றும் பதவி :..........................................................................................

..........................................................................................

13. முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் 1 ஆம் தரத்திற்கு நியமிக்கப்பட்ட திகதி :..........................................................................................

14. வேறு தகைமைகள் (புள்ளி வழங்கல் நடைமுறை ஒழுங்கில்) காட்டப்பட்டுள்ள தகவல்களுக்கேற்ப குறிப்பிடவும்.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

15. நீங்கள் எப்போதேனும் அல்லது ஏதேனும் ஒரு குற்றச்சாட்டிற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா?
(ஏற்புடைய கூட்டினுள் (✓) அடையாளம் இடவும்) ஆம் ☐ இல்லை ☐

(ஆம் எனின் விபரத்தினைக் குறிப்பிடவும்) ..........................................................................................

..........................................................................................

16. உங்களோடு சம்பந்தமான ஏதேனும் தீர்க்கப்படாத ஒழுக்காற்று நடவடிக்கை உள்ளதா ?
(ஏற்புடைய கூட்டினுள் (✓) அடையாளம் இடவும்) ஆம் ☐ இல்லை ☐
(ஆம் எனின் விபரத்தினைக் குறிப்பிடவும்) ..........................................................................................

..........................................................................................

17. நீங்கள் தகைமை அடிப்படையில் தெரிவு செய்யப்படின் இணைப்பு செய்யப்பட விருப்பத்தைத் தெரிவிக்கும் தொழில் நியாய சபைகள் 03 இனை வரிசைப்படி குறிப்பிடுக.

1. ..........................................................................................
2. ..........................................................................................
3. ..........................................................................................

(தொழில் நியாய சபைகளின் பட்டியலை நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதுடன், உங்களால் விருப்பினைத் தெரிவித்து நிறுவனத்திற்கே இணைப்பு செய்யப்படுவதற்கான உறுதிப்பாடாக இதனை கருத்திற் கொள்ளலாகாது.)

18. **விண்ணப்பதாரரின் சான்றிதழ் :**

I. இவ்விண்ணப்பப் படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் தெரிவிக்கின்றேன். இதில் ஏதேனும் ஒரு பகுதி பூரணப்படுத்தப்படாமல் அல்லது பிழையாகப் பூரணப்படுத்தல் ஆகியவற்றினால் ஏற்படும் நட்டத்தினை ஏற்றுக்கொள்ள உடன்படுகின்றேன். மேலும் இங்கு சகல பகுதிகளும் சரியாகப் பூரணப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றேன்.

II. என்னால் வழங்கப்பட்ட இவ் உரையானது உண்மையற்றது என நிரூபணமாகினால் பதவிக்கு தெரிவுசெய்ய முன்னராயின் பதவிக்கு தகுதியற்றவராவதுடன் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து பதவியில் இருந்து பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு கீழ்படிய வேண்டும் என்பதையும் நான் அறிவேன்.

III. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவேலையினையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன்.

..........................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :........................

19. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்**

இவ்விண்ணப்பப்படிவத்தினைச் சமர்ப்பித்துள்ள திரு./திருமதி/செல்வி ................................................ என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் தெரிந்தவர் என்றும், அவர் என் முன்னிலையில் ......../...../......... ஆந் திகதி அவருடைய கையொப்பத்தினை இட்ட படி உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி :....................

...............................................
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
அலுவலரின் கையொப்பம்.

உறுதிப்படுத்திய அலுவலரது முழுப்பெயர் :...............................
பதவி :...............................
முகவரி :...............................
(பதவி முத்திரையால் உறுதிப்படுத்தவும்)

20. **நிறுவனத் தலைவரின் சான்றிதழ்:**

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ................................................ என்பவர் ......../......../...........ஆந் திகதி தொடக்கம் ....................... நிறுவகத்தில் நிரந்தர/தற்காலிக/அமைய உத்தியோகத்தராக சேவையாற்றுவதுடன், அவர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும், உத்தியோகத்தர் தொடர்பாக தீர்க்கப்படாத ஒழுக்காற்று நடவடிக்கையொன்று உண்டு/ இல்லை என்றும், ஏதேனும் ஒழுக்காற்று நடவடிக்கையொன்றினை ஆரம்பிக்க நியமம்/ நியமமில்லை என்றும், அவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குமுறைகளின் பிரகாரம் அவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படின் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்றும் அறியத்தருகின்றேன்.

...................................................
நிறுவனத் தலைவரின் கையொப்பம் மற்றும் பதவி
(முத்திரை)

திகதி :....................................
பெயர் :....................................
பதவி :....................................
அமைச்சு/திணைக்களம் :....................................

**கட்டமைப்பு சார் நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கும் முறை**

01. கைத்தொழில் பிணக்குகள் தொடர்பான அறிவு - 10 புள்ளிகள்
02. இலங்கை நீதித்துறை பற்றிய அறிவு - 10 புள்ளிகள்
03. கல்வி மற்றும் தொழிற் தகைமைகள் (I–IV) - 40 புள்ளிகள்

I. சான்றிதழ் பாடநெறிகள் - 10 புள்ளிகள்
  * அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் சான்றிதழ் வழங்கப்பட்ட பாடநெறி ஒன்றிற்காக (சான்றிதழொன்றிற்கு 02 புள்ளிகள் வீதம் அதிகபட்ச சான்றிதழ்கள் 05 இற்கு)

II. பயிற்சிகள் - 10 புள்ளிகள்
  * மொத்த சேவைக் காலத்தினுள் தாபனவிதிக் கோவை, நிதி ஒழுங்கு நடைமுறைகள், மனித வள முகாமைத்துவம், பொதுமக்கள் தொடர்புகள், சம்பளம், ஒழுக்கம், பெயர்வழிக் கோப்பு ஆகிய மற்றும் கடமை விடயத்துறைக்கு உட்பட்டதாக பெற்றுக்கொள்ளப்பட்ட பயிற்சிகளுக்காக (சான்றிதழொன்றிற்கு 02 புள்ளிகள் வீதம் அதிகபட்ச சான்றிதழ்கள் 05 இற்கு)

III. ஆங்கில அறிவு - 10 புள்ளிகள்
  * டிப்ளோமா பாடநெறியொன்றுக்கு - 06-12 மாதங்கள் வரை (10 புள்ளிகள்)
  * சான்றிதழ் பாடநெறியொன்றுக்கு - 03-06 மாதங்கள் வரை (05 புள்ளிகள்)
  - ஏனையவை (03 புள்ளிகள்)

  (அதிஉயர் தகைமைக்கு புள்ளிகள் வழங்கப்படும்)

IV. கணினி அறிவு - 10 புள்ளிகள்
  * டிப்ளோமா பாடநெறியொன்றுக்கு - 06-12 மாதங்கள் வரை (10 புள்ளிகள்)
  * டிப்ளோமா பாடநெறியொன்றுக்கு - 03-06 மாதங்கள் வரை (05 புள்ளிகள்)
  - ஏனையவை (03 புள்ளிகள்)

  (அதிஉயர் தகைமைக்கு புள்ளிகள் வழங்கப்படும்)

04. சிரேஷ்டத்துவம் :
முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் தரம் 1 இன் சேவைக் காலத்திற்காக

* ஒரு வருடத்திற்கு ஒரு புள்ளி வீதம் அதிகபட்சம் 10 வருடங்களுக்கு
* ஒரு வருடத்திற்கு குறைவான மற்றும் 06 மாதங்களுக்கு மேற்பட்ட கால வரையறைக்கு 0.5 புள்ளிகள்
* 06 மாதங்களுக்கு குறைவான மற்றும் 03 மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு 0.25 புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

**குறிப்பு** - 03 மாதங்களுக்கு குறைவான காலப்பகுதிக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

05. சேவை அனுபவம் :

* தொழில் நியாய சபைகள் செயலாளர் அலுவலகம் அல்லது தொழில் நியாய சபையொன்றில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக சேவையாற்றியிருத்தல் 10 புள்ளிகள் (வருடத்திற்கு 01 புள்ளி வீதம் அதிக பட்சம் 10 வருடங்களுக்கு)
* பிரதான முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக சேவையாற்றுதல் (1 வருடத்துக்கு 1 புள்ளி வீதம் அதிகபட்சம் 5 வருடங்களுக்கு) - (5 புள்ளிகள்)

} 15 புள்ளிகள்

**குறிப்பு** :

- சேவையனுபவத்தில் 06 மாதங்களுக்கு குறையாத மற்றும் ஒரு வருடத்துக்கு குறையாத கால வரையறைக்கு ஒரு வருடத்துக்கு உரித்தான புள்ளி அளவின் அரைவாசி உரித்தாகும். ஆனாலும் 03 மாதங்களுக்கு குறைவான சேவையனுபவத்துக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.
- சேவையனுபவம் தொடர்பாக சமர்ப்பிக்கப்படுகின்ற தகவல்கள் உரிய நிறுவனங்களினால் வெளியிடப்பட்ட ஆவணங்களினூடாக உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

06. நேர்முகப் பரீட்சையில் காட்டப்படும் திறன்கள் : - 15 புள்ளிகள்

* தொடர்பாடல் திறன் (05 புள்ளிகள்)
* தலைமைத்துவம் (05 புள்ளிகள்)
* ஆளுமை (05 புள்ளிகள்)

மொத்தம் 100 புள்ளிகள்

2024.05.01 ஆந் திகதிக்கு உதவிச் செயலாளருக்கான பதவி வெற்றிடங்கள் நிலவுகின்ற தொழில் நியாய சபைகள்

| தொழில் நியாய சபைகள் இல. | முகவரி | வெற்றிடம் ஏற்பட்ட விதம் |
|---|---|---|
| 01 | இல. 95, கலாநிதி என். எம். பெரேரா மாவத்தை, கொழும்பு 08 | ஓய்வு பெறல் |
| 10/02 மேலதிக | 428/11, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல | ஓய்வு பெறல் |
| 02 | இல. 95, கலாநிதி என். எம். பெரேரா மாவத்தை, கொழும்பு 08 | ஓய்வு பெறல் |
| 06 | நீதிமன்ற கட்டிடத்தொகுதி, நவநகரய, இரத்தினபுரி | ஓய்வு பெறல் |
| 13 | இல. 95, கலாநிதி என். எம். பெரேரா மாவத்தை, கொழும்பு 08 | ஓய்வு பெறல் |
| 19 | மேல் நீதிமன்ற பூமி, அவிஸ்ஸாவளை | ஓய்வு பெறல் |
| 21/மேலதிக | 4 ஆம் மாடி, நீதிமன்ற கட்டிடத்தொகுதி. நீர்கொழும்பு | ஓய்வு பெறல் |

| தொழில் நியாய சபைகள் இல. | முகவரி | வெற்றிடம் ஏற்பட்ட விதம் |
|---|---|---|
| 22 | நீதிமன்ற கட்டிடத்தொகுதி, மட்டக்களப்பு | ஆரம்பம் முதல் நியமிக்கப்படவில்லை |
| 24 | ஸ்ரீ போதி வீதி, கம்பஹா | ஓய்வு பெறல் |
| 25 | மாவட்ட நீதிமன்ற பூமி, பாணந்துறை | ஓய்வு பெறல் |
| 30 | நீதிமன்ற கட்டிடத் தொகுதி, புதிய கண்டி வீதி, கடுவெல | இடமாற்றம் பெற்றுச் செல்லல் |
| 31 | இல. 668, நீர்கொழும்பு வீதி, மாபோல. வத்தளை | வெளிநாட்டு சேவையில் தொழிலொன்றுக்காக செல்லல் |
| 34 | பழைய மொரவக்க நீதவான் நீதிமன்ற கட்டிடம், கல்தொல, கொட்டபொலை | இடமாற்றம் பெற்றுச் செல்லல் |
| 36 | வெலிமடை வீதி, பண்டாரவளை | இடமாற்றம் பெற்றுச் செல்லல் |
| 37 | டீ. வீ. தர்மலிங்கம் கலாசார மண்டபம், தெவிசிரிபுர தலவாக்கலை | இடமாற்றம் பெற்றுச் செல்லல் |
| 38 | புதிய நீதிமன்ற கட்டிடத்தொகுதி, பேலி வீதி, நாவலப்பிட்டி | இடமாற்றம் பெற்றுச் செல்லல் |
| 39 | பலாபத்வல, மாத்தளை | இடமாற்றம் பெற்றுச் செல்லல் |
| 40 | நீதிமன்ற கட்டிடத்தொகுதி, நவநகரய, இரத்தினபுரி (பலாங்கொடை) | இடமாற்றம் பெற்றுச் செல்லல் |
| 44 | நீதிமன்ற கட்டிடத்தொகுதி, அம்பாறை | இடமாற்றம் பெற்றுச் செல்லல் |
| திருகோணமலை | நீதிமன்ற கட்டிடத்தொகுதி, திருகோணமலை | இடமாற்றம் பெற்றுச் செல்லல் |
| ஹம்பாந்தோட்டை | எதிர்வரும் காலங்களில் தாபிக்கப்படவுள்ளது | இடமாற்றம் பெற்றுச் செல்லல் |

தொழில் நியாய சபை உதவிச் செயலாளர்

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை | - | 39 |
| இருக்கின்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | - | 17 |
| வெற்றிடங்களின் எண்ணிக்கை | - | 22 |

- ❖ புதிய ஆட்சேர்ப்புக்களில் உள்ளக இடமாற்றம் வழங்குதல் தொடர்பாக கருத்திற் கொள்ளப்படுவதால் மேலே வெற்றிடம் நிலவுகின்ற இடங்கள் சிறிதளவு மாறக்கூடும்.
- ❖ இதற்கு மேலதிகமாக எதிர்வரும் காலங்களில் திறக்க எதிர்பார்த்துள்ள அம்பாந்தோட்டை நியாய சபையின் உதவிச் செயலாளர் பதவிக்கு உத்தியோகத்தர் ஒருவரை இணைப்பு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.
- ❖ இல. 01/02 மேலதிக பத்தரமுல்லையில் உதவிச் செயலாளர் பதவியானது ஒன்றாக கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது.
- ❖ இல. 06, இரத்தினபுரி மற்றும் இல. 40, பலாங்கொடை எனும் தொழில் நியாய சபைகள் 02 இற்கு ஒரு உதவிச் செயலாளர் பதவி போதுமானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ❖ அதன்படி 2024.05.01 ஆந் திகதிக்கு தொழில் நியாய சபைகள் பதவியில் மொத்த வெற்றிட எண்ணிக்கை 20 ஆக கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

07-365

## பகிரங்க சேவைகள் ஆணைக்குழு

## சட்ட உத்தியோகத்தர்(நிறைவேற்று சேவை வகுதி - தரம் III) பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2024

பகிரங்கச் சேவை ஆணைக்குழு அலுவலகத்தில் வெற்றிடமாக உள்ள சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு (01) பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **ஆட்சேர்ப்பு முறை:**

பகிரங்கச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் நடாத்தப்படும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளுக்கு அமைய அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் பரீட்சார்த்தி, அறிவித்தலில் குறிப்பிடப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டு வெற்றிடத்திற்காக ஆட்சேர்க்கப்படுவார். பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட புள்ளிகள் வழங்கும் திட்டத்திற்கு (இலக்கம் 07 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) அமைய தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியானது பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

02. **தேவையான தகைமைகள் :**

i. ***கல்வி /தொழில் தகைமைகள் :***

*உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்திருத்தல்.*

ii. ***அனுபவம்***

*உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்த பின்னர் ஏற்புடைய பதவியில் மூன்று வருடங்களுக்குக் (03) குறையாத முனைப்பான தொழில் அனுபவத்தைப் பெற்றிருத்தல். (முனைப்பான தொழில் அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களில் அனுபவம் பெற்றுக்கொள்ளப்பட்ட காலம், திகதி மற்றும் உத்தியோகப்பூர்வ முத்திரை என்பவற்றைத் தெளிவாகக் குறிப்பிட்டு நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும்.)*

*அல்லது*

*உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்த பின்னர் அரச நிறுவனமொன்றில் சட்டத்துறையில் ஏற்புடைய பதவியில் *மூன்று (03) வருடங்களுக்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல்.*

*(இவ்விடயங்களை செயலாளர் / திணைக்களத் தலைவரினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றின் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்)*

**குறிப்பு:**

*அடிப்படைத் தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களின் விண்ணப்பதாரியினால் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். சேவைக் காலம் ஆரம்பமாகும் மற்றும் முடிவுறும் திகதியைத் தெளிவாகக் குறிப்பிடும் சான்றிதழ்கள் இணைக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படலாம்.*

* *சட்ட விவகாரங்கள் தொடர்பான பதவி என்பது, சட்டத்துறையில் பட்டம் அல்லது உச்ச நீதிமன்றத்தின் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்திருத்தல் ஆட்சேர்ப்பிற்கான அடிப்படைத் தகைமையாகும் பதவியாகும்.*

iii. ***உடற் தகைமைகள் :***

*சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியில் கடமையாற்றுவதற்கும் போதியளவு உடல் மற்றும் உள ரீதியாகத் தகைமைப் பெற்றிருத்தல் வேண்டும்.*

iv. ***வேறு தகைமைகள் :***

- *விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.*
- *கணினி அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், மின்னஞ்சல் மற்றும் Ms-Office ஐ சிறந்த முறையில் பயன்படுத்தக் கூடியவராயிருத்தல் வேண்டும்.*
- *இவ் அறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் தினத்தன்று மேற்குறித்த அனைத்துத் தகைமைகளையும் எல்லாவிதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.*

03. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள் :**

i. இப்பதவி நிரந்தமானது. ஓய்வூதியம் உரித்துடையது. தங்களுக்கு உரித்தான ஓய்வூதிய முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்குத் தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும். விதவைகள், அநாதைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும். தாங்கள் காலத்துக்குக் காலம் அரசாங்கம் பிரகடனப்படுத்தும் விதத்தில் இந்த நிதியத்துக்கு உதவுத் தொகைகள் செலுத்துதல் வேண்டும்.

ii. இப்பதவி 03 வருட தகுதிகூர் நிலை காலத்திற்கு உட்படுத்தப்படும். பதவிக்கு நியமிக்கப்பட்டு 03 வருடங்களுக்குள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் உள்ளவாறு முதலாம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

iii. 2020.10.16 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல. 18/2020 இன் ஏற்பாடுகளுக்கு அமைய உரிய மற்றைய அரசகரும மொழியில்/அரசகரும மொழிகளில் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

iv. இந்நியமனம், பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும், அரசாங்க நிதி ஒழுங்கு விதிகளுக்கும் திணைக்களத்துக்குரிய ஏனைய கட்டளைகளுக்கும் உட்பட்டிருக்கும்.

04. **வயதெல்லை :**

விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 21 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

05. **சம்பள அளவுத் திட்டம் :**

இல. 03/2016 மற்றும் 2016.02.25 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் அட்டவணை I இன் பிரகாரம், இப்பதவிக்கு, ரூபா 47,615 - 10×1,335 - 8 × 1,630-17 ×2,170 - ரூபா 110,895.00 (SL-1-2016) எனும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம் உரித்தாகும்.

06. **பதவிக்குரிய பணிகள் :**

i. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்கள்/முடிவுகளுக்கு எதிராக நிருவாக மேன்முறையீட்டு நியாயசபை/ மனித உரிமைகள் ஆணைக்குழு/ மேன்முறையீட்டு நீதிமன்றம்/ உயர் நீதிமன்றம்/ பொது மனுக்குழு/ ஏனைய பாராளுமன்ற குழுக்கள்/ அரசகரும மொழிகள் ஆணைக்குழு மற்றும் குறைகேள் அதிகாரியிடம் (ஓம்புட்ஸ்மன்) மற்றும் ஏனைய நிறுவனங்களிடம் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகளுக்கு ஆணைக்குழுவின் நிலைப்பாட்டினை தெளிவுபடுத்தி ஏற்புடையவாறு தோற்றுதல்/பிரதிநிதித்துவப்படுத்தல்.

ii. சட்ட நடவடிக்கைகளுக்குரிய அனைத்து அறிக்கைகளையும் தயாரித்தல் மற்றும் கோவைகளைப் பேணுதல்.

iii. சட்ட விடயங்கள் தொடர்பிலான நடவடிக்கைகளை சட்டமா அதிபர் திணைக்களத்துடன் இணைந்து ஒருங்கிணைப்பு செய்தல்.

iv. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் தொடர்பில் ஏற்புடைய அறிக்கைகளைத் தயாரித்தல் / அவ் ஆணைக் குழுவினால் அழைக்கப்படுகையில் ஏற்புடைய தகவல்களுடன் தோற்றுதல்.

v. பகிரங்க சேவை ஆணைக்குழு சார்பாக கௌரவ சட்டமா அதிபர் தோற்றாத வழக்குகளின் போது ஏற்புடைய நீதிமன்றத்தின் முன்னிலையில் ஆணைக்குழு சார்பாகத் தோற்றுதல்.

vi. நிறுவனத் தலைவரினால் கையளிக்கப்படும் வேறு பணிக் கடமைகள்.

07. தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்குப் பின்வரும் புள்ளி வழங்கும் திட்டம் அடிப்படையாகக் கொள்ளப்படும்.

<table>
<tr><th>தொடர் இலக்கம்</th><th>விடயம்</th><th>புள்ளிகள்</th><th>உச்சப் புள்ளிகள்</th></tr>
<tr><td>01</td><td>மேலதிக கல்வித் தகைமைகள்<br>குறிப்பு - ஆகக் கூடிய தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.</td><td></td><td>15</td></tr>
<tr><td></td><td>(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்ட சட்டத்துறையில் முதுகலைமாணி பட்டம்</td><td>12</td><td></td></tr>
<tr><td></td><td>(ஆ) இலங்கை சட்டக் கல்லூரியின் உயர் சட்டக் கற்கைகள் நிறுவகத்தில் பெற்றுக் கொண்ட முதுகலைமாணி சட்ட டிப்ளோமா</td><td>11</td><td></td></tr>
<tr><td></td><td>(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்ட சட்டத்துறையில் முதுகலைப் பட்டதாரி டிப்ளோமா</td><td>10</td><td></td></tr>
<tr><td></td><td>(ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்ட</td><td></td><td></td></tr>
<tr><td></td><td>முதலாம் வகுப்பு சித்தியுடனான சட்டத்துறையில் இளமாணிப் பட்டம்</td><td>06</td><td></td></tr>
<tr><td></td><td>இரண்டாம் வகுப்பு மேல் நிலை சித்தியுடனான சட்டத்துறையில் இளமாணிப் பட்டம்</td><td>05</td><td></td></tr>
<tr><td></td><td>வகுப்பு சித்தியுடனான சட்டத்துறையில் இளமாணிப் பட்டம்</td><td>04</td><td></td></tr>
<tr><td></td><td>சாதாரண சித்தியுடனான சட்டத்துறையில் இளமாணிப் பட்டம்</td><td>02</td><td></td></tr>
<tr><td></td><td>(உ) சட்டக் கல்லூரி இறுதியாண்டில் முதல் வகுப்பில் தேர்ச்சி</td><td>06</td><td></td></tr>
<tr><td></td><td>சட்டக் கல்லூரி இறுதியாண்டில் இரண்டாம் வகுப்பில் தேர்ச்சி<br>(குறிப்பு - சட்டக் கல்லூரி இறுதிப் பரீட்சையில் சிறப்புத் தேர்ச்சியுடன் சித்தியடைந்திருந்தால் மட்டுமே மேற்குறித்த 06 புள்ளிகள் வழங்கப்படும்.)</td><td>04</td><td></td></tr>
<tr><td>02</td><td>மேலதிக அனுபவம்<br>வழக்குகளுக்கு ஏற்புடைய ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் திறந்த நீதிமன்றத்தில் விடயங்களை முன்வைத்தல்<br>
<table>
<tr><th></th><th>நீதிமன்றம் முன்னிலையில் வழக்குத் தொடரலுக்கான உச்சப் புள்ளிகள் (வழக்கொன்றுக்கு 0.5)</th><th>நீதிமன்றம் முன்னிலையில் தோற்றுதல் (வழக்கொன்றுக்கு 0.5)</th></tr>
<tr><td>உயர் நீதிமன்றம்</td><td>06</td><td>06</td></tr>
<tr><td>மேன்முறையீட்டு நீதிமன்றம்</td><td>05</td><td>05</td></tr>
<tr><td>மேல் நீதிமன்றம்</td><td>03</td><td>04</td></tr>
<tr><td>மாவட்ட நீதிமன்றம்</td><td>05</td><td>05</td></tr>
<tr><td>நியாய சபைகள் (AAT)</td><td>05</td><td>06</td></tr>
<tr><td>மனித உரிமைகள் ஆ. கு./நியாய சபைகள்(LT)</td><td>02</td><td>03</td></tr>
</table>
குறிப்பு: மேற்குறித்த தகைமைகளை சான்றுப்படுத்துவதற்கு ஏற்புடைய வழக்குத் தீர்ப்புக்களின் பிரதிகள் அல்லது இறுதியாக வழக்கு இடம்பெற்ற திகதியிலான வழக்கு அறிக்கையின் உறுதிப்படுத்திய பிரதியை நேர்முகப் பரீட்சை சபையிடம் சமர்பித்தல் வேண்டும்.</td><td></td><td>55</td></tr>
</table>

| தொடர் இலக்கம் | விடயம் | புள்ளிகள் | உச்சப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 03 | **மொழித்திறன்**<br>**(அதிகூடிய தகைமைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்)**<br>**(1) இணைப்பு மொழி** | | 10 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் ஆங்கில மொழியைப் பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் | 04 | |
| | (ஆ) அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச அல்லது தேசிய அளவிலான (Moot Court Competitions) போட்டிகளில் வெளிப்படுத்தப்பட்ட ஆங்கில மொழிப் புலமை.<br>**தனியாள்**<br>i. முதல் நிலை/சிறந்த தகுதி - 03<br>ii. இரண்டாம் இடம் - 02<br>iii. மூன்றாம் இடம் /ஏனைய தகைமைகள் - 01<br>**குழுக்கள்**<br>i. முதல் நிலை/சிறந்த தகுதி - 03<br>ii. இரண்டாம் இடம் - 02<br>iii. மூன்றாம் இடம் /ஏனைய தகைமைகள் - 01 | 03 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து ஆங்கில மொழிக்காகப் பெற்றுக் கொண்ட டிப்ளோமா அல்லது வேறு ஏதேனும் ஒரு நிறுவனத்திலிருந்து ஆங்கில மொழிக்காகப் பெற்றுக்கொண்ட SLQF 3 அல்லது அதற்கு மேற்பட்ட டிப்ளோமா அல்லது அரச பயிற்சி நிறுவனமொன்றில் / அரச பயிற்சி நிறுவனத்துடன் இணைந்த நிறுவனமொன்றில் ஆகக்குறைந்தது 1500 மணித்தியாலங்கள் பயின்று ஆங்கில மொழிக்கு டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும். | 03 | |
| | (ஈ) விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலின் இறுதித் திகதிக்கு உடன்முன்னரான 02 வருடங்களில் கல்வி பொதுத் தராதரப் (உயர்தரம்) பரீட்சையில் ஆங்கில மொழியில் ஆகக்குறைந்தது திறமைச் சித்தி பெற்றிருத்தல் Edexel அல்லது Cambridge அல்லது IELTS இல் மொத்தப் புள்ளிகள் 6.5 அல்லது அதற்கு மேல், TOFEL – IBT 79 அல்லது அதற்கு மேல், TOEFL – CBT 213 அல்லது அதற்கு மேற்பட்ட அல்லது TOEFL – PBT 550 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருத்தல். | 02 | |
| | (உ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து ஆங்கில மொழிக்குப் பெற்றுக் கொண்ட உயர் சான்றிதழ் அல்லது வேறு நிறுவனத்திடமிருந்து ஆங்கிலத்திற்காகப் பெற்றுக் கொண்ட SLQF 2 நிலை சான்றிதழ். | 01 | |
| | **(II) மற்றைய அரசகரும மொழி (சிங்களம்/தமிழ்)** | | |
| | (அ) அரசாங்கத்தின் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனத்திடமிருந்து அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட டிப்ளோமா பாடநெறி (கால எல்லை 06 மாதங்களுக்கு/720 மணித்தியாலங்களுக்குக் குறையாத) | 06 | |
| | (ஆ) அரசாங்கத்தின் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழ் பாடநெறி (கால எல்லை 03 மாதங்களுக்கு/ 360 மணித்தியாலங்களுக்குக் குறையாத) | 05 | |
| | (இ) க. பொ. த. (சா.தர) பரீட்சையில் (உள்ளூர் அல்லது லண்டன்) சிங்கள மற்றும் தமிழ்மொழியை முதல் மொழியாக சித்தி பெற்றிருத்தல் (இரண்டு மொிழகளிலும் ஆகக் குறைந்த தரத்திற்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப் படும்) | | |
| | விசேட சித்தி | 05 | |
| | அதி திறமைச் சித்தி | 04 | |
| | திறமைச் சித்தி | 03 | |
| | சாதாரண சித்தி | 02 | |

| தொடர் இலக்கம் | விடயம் | புள்ளிகள் | உச்சப் புள்ளிகள் |
|---|---|---|---|
| | (ஈ) க. பொ. த. (சா.தர) பரீட்சையில் (உள்ளூர் அல்லது லண்டன்) சிங்கள மற்றும் தமிழ்மொழியை இரண்டாவது மொழியாக சித்தி பெறுதல் | | |
| | அதி திறமைச் சித்தி | 02 | |
| | சாதாரண சித்தி | 01 | |
| 4 | **நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறன்** | | 20 |
| | i. தொழில் மற்றும் அதன் நெறிமுறைகள் குறித்த மனப்பாங்கு | 04 | |
| | ii. சட்டத்துறையின் நவீன போக்குகள் பற்றிய அறிவு (நிர்வாக சட்டம், மனித உரிமைகள் சட்டம், நியதிச்சட்டம், சான்றியல் சட்டம் குறித்த விசேட கவனத்துடன்) | 10 | |
| | iii. சரளமாகவும் தர்க்க ரீதியாகவும் கருத்துக்களைத் தெரிவிக்கும் ஆற்றல் | 06 | |
| | **மொத்தம்** | | **100** |

08. **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம்:**

சகல வழிகளிலும் பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரமே தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையின் போது அனைத்து ஆவணங்களினதும் மூலப் பிரதிகள் மற்றும் விண்ணப்பதாரியினால் உரியவாறு சான்றுப்பத்தப்பட்ட பிரதிகளையே சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின் போது தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தவதற்குப் பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

i. ஆட்களை பதிவு செய்யும் ஆணையாளர் நாயகம் அவர்களினால் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் தேசிய ஆளடையாள அட்டை;
ii. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு

09. **விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்க வேண்டிய முறை:**

(i) விண்ணப்பப்படிவங்களை 2024.08.15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், பகிரங்கச் சேவை ஆணைக்குழு, இலக்கம் 1200/9, இராஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல" என்னும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபால் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரிப் படிவம் இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பப்படிவங்களை A4 அளவு தாளில் தயாரித்தல் வேண்டும். இலக்கம் 01 தொடக்கம் 04 வரை முதலாம் பக்கத்தில் அமையுமாறும் இலக்கம் 05 தொடக்கம் 07 வரை இரண்டாம் பக்கத்தில் அமையுமாறும் இலக்கம் 08 தொடக்கம் 11 வரை மூன்றாம் பக்கத்தில் அமையுமாறும் தயாரித்து தனது கையெழுத்துக்களினால் பூரணப்படுத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சட்ட அலுவலர் தரம் - III பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம், அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபரினால் / சமாதான நீதவான் ஒருவரினால்/ சத்தியப் பிரமாண ஆணையாளரினால் / சட்டத்தரணி ஒருவரினால் / பிரசித்தி பெற்ற நொத்தாரிஸ் ஒருவரினால் / முப்படைகளின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகதத்தர் அல்லது ரூபா 47,615.00 ஐ அல்லது அதற்கு மேல் மாதாந்த திரட்டு வேதனத்தைப் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள நிரந்தர பதவிநிலை அலுவலர் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(v) தற்போது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தங்களது விண்ணப்பப்படிவங்களைத் தாம் சேவையாற்றும் திணைக்களத்தின் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(vi) இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாகக் காணப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் காணாமல் போதல் அல்லது நிராகரிக்கப்படுதல் தொடர்பான எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

10. **தவறான தகவல்களை வழங்குதல்**

தங்களால் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படும் ஏதேனும் தகவல்கள் பொய்யானவை அல்லது தவறானவை என ஆட்சேர்ப்புக்குப் முன்னர் தெரியவருமிடத்து தங்களது பரீட்சார்தத் தகைமை இரத்துச் செய்யப்படும். அவ்வாறான பொய்யான அல்லது தவறான தகவல்கள் ஆட்சேர்ப்புக்குப் பின்னர் தெரியவருமிடத்து அதற்குரிய நடவடிக்கைகளுக்கு உட்பட்ட வகையில் சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

11. வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது நிரப்பாமல் விடும் உரிமை பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு உரியதாகும்.

12. இவ் வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழிப் பதங்களுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை அல்லது முரண்பாடு ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழிப் பதமே மேலோங்கி நிற்கும்.

13. இவ் அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பில் அல்லது இந்த ஆட்சேர்ப்பு செயன்முறையில் ஏதேனும் சிக்கலான சூழ்நிலை ஏற்பட்டால், அது தொடர்பில் பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

பகிரங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்புக்கமைய,

டபிள்யூ. எச். எம். எம். சீ. கே. தயாரத்ன,
செயலாளர்,
பகிரங்க சேவை ஆணைக்குழு.

பகிரங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
1200/09, இரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்ல,
2024.07.02.

(அலுவலக உபயோகத்திற்கு)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பகிரங்க சேவை ஆணைக்குழு**

**சட்ட உத்தியோகத்தர் (நிறைவேற்று உத்தியோகத்தர் வகுதியின் தரம் III ) பதவிக்குத் திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல் - 2024**

விண்ணப்பிக்கும் மொழிமூலத்திற்குரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக

சிங்களம் - 2 தமிழ் - 3 ஆங்கிலம் - 4 ☐

01. 1.1 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்): ..................................................................................................................................................................................

(உ-ம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதிப் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ..................................................................................................................................................

(உ-ம் : GUNAWARDHANA, H. M. S. K.)

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில் / தமிழில்) :.....................................................................................................................................................................

1.4 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

02. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ..................................................................................................
..................................................................................................................................................

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில் /தமிழில்) : ..................................................................................................
..................................................................................................................................................

03. 3.1 பால்நிலை: ஆண் - 0
பெண் - 1 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

3.2 பிறந்த திகதி : வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.3 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது: (2024.08.15)

வருடங்கள் : ☐☐☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

3.4 தொலைபேசி இலக்கம்: நிலையானது :..............................................
கையடக்க :..............................................

3.5 மின்னஞ்சல் முகவரி : ........................................................................................................................

04. கல்வித் தகைமைகள்:

பட்டம் அல்லது உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்வதற்கு ஏற்புடைய சான்றிதழ் பற்றிய விபரம் :

i. வழங்கப்பட்ட திகதி :................................................
ii. பல்கலைக்கழகம் அல்லது நிறுவனம் :................................................
iii. பட்டத்தின் அல்லது கல்விச் சான்றிதழின் பெயர் :................................................
iv. பட்டம் அல்லது கல்விச் சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி :................................................
v. வகுப்பு :................................................
vi. பட்டத்தைப் பயின்ற மொழிமூலம் :................................................

05. மேலதிகக் கல்வித் தகைமைகள்:

| பாடநெறி | பெற்றுக்கொண்ட நிறுவனம் | தகைமை/சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

06. சட்டத் துறையில் பெற்றுள்ள அனுபவம் :

| | நீதிமன்றம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | நீதிமன்றம் முன்னிலையில் தோற்றிய எண்ணிக்கை |
|---|---|---|
| உயர் நீதிமன்றம் | | |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் | | |
| மேல் நீதிமன்றம் | | |
| மாவட்ட நீதிமன்றம் | | |
| நியாயசபைகள் (AAT) | | |
| மனித உரிமைகள் ஆ. கு./ நியாய சபைகள் (LT) | | |

7.1 மொழித்திறன் :

| | பேச்சு | | | எழுத்து | | | வாசிப்பு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மிக நன்று | நன்று | மிகக் குறைவு | மிக நன்று | நன்று | மிகக் குறைவு | மிக நன்று | நன்று | மிகக் குறைவு |
| சிங்களம் | | | | | | | | | |
| தமிழ் | | | | | | | | | |
| ஆங்கிலம் | | | | | | | | | |

7.2 இணைப்பு மொழி மற்றும் மற்றைய அரசகரும மொழி (சிங்களம்/தமிழ்) தொடர்பில் பயின்றுள்ள பாடநெறிகளின் விபரங்கள் (பட்டம்/டிப்ளோமா/சான்றிதழ் பாடநெறி)

.......................................................................................................................................
.......................................................................................................................................
.......................................................................................................................................
.......................................................................................................................................
.......................................................................................................................................
.......................................................................................................................................
.......................................................................................................................................
.......................................................................................................................................
.......................................................................................................................................
.......................................................................................................................................
.......................................................................................................................................

08. தாங்கள் ஏதும் குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் எப்போதாவது குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? ........................................
(உரிய ✓ கூட்டில்) அடையாளத்தை இடுக. தங்களது பதில் ஆம் எனின் விபரங்களைத் தருக.)

ஆம் ☐ இல்லை ☐

.......................................................................................................................................

09. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) இவ் விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் சரியானதும் உண்மையானதுமாகும் என்பதை கௌரவமாக வெளிப்படுத்துகின்றேன். இங்கு ஏதேனும் பகுதிகளை பூரணப்படுத்தாமல் மற்றும்/அல்லது தவறாகப் பூரணப்படுத்தியதன் காரணமாக ஏற்படும் நட்டத்தைப் பொறுப்பேற்க உடன்படுகின்றேன். மேலும் இங்கு சகல பகுதிகளையும் சரியாகப் பூரணப்படுத்தியுள்ளேன் என்பதையும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் தகவல்கள் பொய்யானதென நிரூபிக்கப்படுமிடத்து நியமனம் பெறுவதற்கு முன்னர் தகைமையற்றவனாக்கப்படுவேன் என்றும் நியமனத்தின் பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்குக் கட்டுப்பட்டுள்ளேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) மேலும், கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையை நடாத்துதல் தொடர்பில் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்படுவேன் என்பதையும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஈ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன்.

...................................... ......................................................

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

10.0 **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

இவ்விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கின்ற திரு. /திருமதி/செல்வி ............................................................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் .................... ஆந் திகதி என் முன்னிலையில் அவரது கையொப்பத்தையிட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி :..................................... ......................................................

உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தர் பெயர் :...............................
பதவி :................................
முகவரி :...............................................
திகதி :................................
(உத்தியோகப்பூர்வ முத்திரை மூலம் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்)

11.0 **திணைக்கள/நிறுவனத் தலைவரின் உறுதியுரை** (அரசாங்க /மாகாண அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)

இவ்விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் திரு./ திருமதி / செல்வி ................................... தற்போது இந்த அமைச்சில்/ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் ......................................ஆகக் கடமை புரிகின்றார் என்பதோடு, அவரது விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன். அவர் இந்தப் பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து இந்த நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

..............................,
திணைக்கள / நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர்:............................................
பதவி :............................................
முகவரி :............................................
திகதி :...............................

(உத்தியோகப்பூர்வ முத்திரை மூலம் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்)

07-376

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு

நில அளவைகள் சபை

இலங்கை நில அளவைகள் சபையானது, நில அளவைகள் மற்றும் நில அளவையாளர்களின் தொழில் சார் நடத்தை என்பவற்றைக் கண்காணிப்பதற்காக 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைகள் சட்டத்தின் மூலம் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள பகுதியளவு அரச நிறுவனம் ஒன்றாகும். நில அளவைகள் சபைக்கு உரித்தான பிரதான கடமைப் பொறுப்புக்கள் நில அளவையாளர்களைப் பதிவு செய்தல், வருடாந்த நில அளவை அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி மற்றும் நில அளவைகள் துறைக்குரிய முறைப்பாடுகளை விசாரணை செய்தல் என்பன ஆகும்.

கீழ்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கைப் பிரசைகள் ஆகிய தகைமை பெற்ற நபர்களை இணைத்துக் கொள்வதற்கு சபை எதிர்பார்க்கின்றது.

முகாமைத்துவ உதவியாளர் தரம் III - 03 வெற்றிடங்கள்

**கல்வித் தகைமைகள் :**

(அ) கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தரம்) பரீட்சையில்
 i. சிங்களம்/தமிழ்
 ii. கணிதம்
 ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே முறையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்து இருத்தல்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர (உயர் தரம்) பரீட்சையில் ஆகக் குறைந்தது மூன்று பாடங்களில் (பொது அறிவுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்து இருத்தல்.

(இ) கணினிப் பாவனை தொடர்பாக ஆறு (06) மாதங்களுக்குக் குறையாத சான்றிதழ் பாடநெறி ஒன்றினைக் கற்றிருத்தல்.

**வயது** : 18 வயதுக்குக் குறையாமலும் மற்றும் 45 வயதுக்கு அதிகரிக்காமலும் இருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்புச் செய்யும் வழிமுறை** :

பொது உளச்சார்புப் பரீட்சை மற்றும் பொது அறிவு, மொழித் தேர்ச்சி மற்றும் கணினிப் பரீட்சை ஆகிய மூன்று பாடங்களில் எழுத்து மூலப் போட்டிப் பரீட்சை ஒன்றினதும் மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றினதும் பெறுபேறுகளின் அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்படுவர்.

**மாதாந்த சம்பள அளவுத் திட்டம்** : (MA-1-1) - ரூபா 27,910 - 10×300 - 7 × 350 - 4 ×495 - 20 660 - ரூபா 48,540.00

**ஏனைய பயன்தொகைகள் :**

(1) ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான உரிமைகள்
(2) இடர் கடன்
(3) விழா முற்பணம்
(4) அரசினால் அனுமதிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு மற்றும் சம நிலையில் உள்ள பகுதியளவு அரச நிறுவனங்களினால் அனுபவிக்கப்படும் ஏனைய பயன்தொகைகள் என்பனவும் உரித்தாகும்.

**விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளும் முறை**:

www.landsurveycouncil.org எனும் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டு உள்ள நிகழ்நிலை விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்து சமர்ப்பித்ததன் பின்னர், விண்ணப்பதாரியினால் முன்வைக்கப்பட்ட விபரங்கள் உள்ளடங்கிய PDF படிவத்தில் விண்ணப்பம் ஒன்றினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**விண்ணப்பத்தினை அனுப்பி வைக்கும் முறை**:

அவ்வாறு பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியை உறுதிப்படுத்தி, கல்விச் சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் இலங்கை வங்கியின் நாராஹேன்பிட்ட கிளையில் "தலைவர், நில அளவைகள் சபை" எனும் பெயரில் உள்ள 0001658239 ஆம் இலக்க கணக்கிற்கு ரூபா 1,200.00 தொகைப் பரீட்சைக் கட்டணத்தை வைப்புச் செய்து பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டுடன் கீழே குறிப்பிடப்பட்டு உள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் 2024.08.12 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறும் வகையில் அனுப்பி வைத்தல் வேண்டும். (இந்தக் கட்டணம் எந்த வகையிலும் மீளச் செலுத்தப்படமாட்டாது

என்பது தொடர்பில் கவனம் செலுத்தவும்) விண்ணப்பத்தினை உள்ளிட்டு அனுப்பும் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "முகாமைத்துவ உதவியாளர் பதவிக்காக" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

தலைவர்,
நில அளவைச் சபை.

நில அளவையாளர் நாயக அலுவலகம்,
150, பேர்னாட் சொய்சா மாவத்தை,
கொழும்பு 05.

07-378

---

## கல்வி அமைச்சு

### ஆசிரியர் கல்லூரிகளில் ஆசிரியர் கல்விப் பாடநெறியினைத் தொடர்வதற்காக ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்தல் - 2024/2025

கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இலக்கம் 28/2016 இற்கமைய தகைமைகளைப் பூர்த்தி செய்யும் பட்டதாரி அல்லாத பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கு ஆசிரியர் கல்லூரிகளில் ஆசிரியர் கல்விப் பாடநெறியினைத் தொடர்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆசிரியர் கல்வி பாடநெறியினை இதுவரை பூர்த்தி செய்யாத ஆசிரியர்கள் ஆசிரியர் உதவியாளர்கள், இச் சுற்றறிக்கை இலக்கம் 28/2016 இற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2024, ஓகத்து 30 ஆந் திகதிக்கு முன்னர் "கல்விப் பணிப்பாளர், ஆசிரியர் கல்வி நிருவாகக் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

இச்சுற்றறிக்கை விண்ணப்பப்படிவம் மற்றும் ஆலோசனைப் படிவத்தை கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளம் மூலம் (www.moe.gov.lk) எந்தவொரு வலயக் கல்வி அலுவலகத்தின் மூலமும் பெற்றுக் கொள்ள முடியும்.

ஜே. எம். திலகா ஜயசுந்தர,
செயலாளர்,
கல்வி அமைச்சு,
இசுருபாய, பத்தரமுல்ல.

**ஆசிரியர் கல்லூரிகளில் 2024/2025 ஆசிரியர் கல்விப் பாடநெறியைத் தொடர்வதற்கான விண்ணப்பப்படிவம்**

1. மொழி மூலம் : [ ]

2. விண்ணப்பிக்கும் பாடநெறி : [ ]

3. முதல் நியமனக் கடிதத்திற்கமைய பாடசாலையில் கடமையைப் பொறுப்பேற்ற திகதி : [ ]

4. முதல் நியமனத்தின் தன்மை, பாடம் மற்றும் தங்களுக்குரிய சேவை /தரம் :

(அ) முதல் நியமனத்தின் தன்மை : ..............................................................................

| | | |
|---|---|---|
| இலங்கை ஆசிரியர் சேவை | - 01 | |
| ஆசிரியர் உதவியாளர் | - 02 | |
| பிரிவெனா | - 03 | [ ] |
| தனியார் பாடசாலை ஆசிரியர் சேவை | - 04 | |
| ஏனையவை (குறிப்பிடவும்) | - 05 | |

..............................................................................................................................

(ஆ) நியமனப் பாடம் :

(ஈ) அடங்கும் தரம் :

5. தாங்கள் பாடநெறிக்காக தேர்ந்தெடுக்கவுள்ள ஆசிரியர் கல்லூரியின் பெயர் (ஆலோசனைப் படிவத்தின் இலக்கம் 2.3 ஐப் பார்க்கவும்)
1. .............................................
2. .............................................

6. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் குறிப்பிடவும். இறுதியில் வரும் பெயரை முதலில் எழுதி முதலெழுத்துக்களை இரண்டாவதாகக் குறிப்பிடவும். உ-ம் : PERERA, A.B)
Rev./Mr./Mrs./Ms. ..........................................................................................................................

7. முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் குறிப்பிடவும்)
..........................................................................................................................................................

8. ஆண் /பெண் பால் (உரிய இலக்கத்தை முன்னால் உள்ள கூட்டினுள் குறிப்பிடவும்)
ஆண் - 01 பெண் - 02

9. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

10. (அ) பிறந்த திகதி : ...........................................................................................................................
(ஆ) 2024.08.30 ஆம் திகதியன்று வயது : வருடங்கள்: .............. மாதங்கள் :............... நாட்கள்:..............

11. தொலைபேசி இலக்கம் : வீடு : ............................... கையடக்க: ............................

12. மின்னஞ்சல் முகவரி (இருப்பின்) : .........................................................................................................

13. சொந்த முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் குறிப்பிடவும்)
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

14. (1) தற்போதைய சேவை இடம், முகவரி மற்றும் வலயம் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் குறிப்பிடவும்)
..........................................................................................................................................................
..........................................................................................................................................................
மாவட்டம் .................................................. வலயம் ........................................................

(2) சேவை இடத்தின் தன்மை : (உரிய இலக்கத்தை முன்னால் உள்ள கூட்டினுள் குறிப்பிடவும்)
அரச பாடசாலை - 01, தோட்டப் பாடசாலை - 02, அரச அங்கீகாரம்பெற்ற பிரிவெனா - 03,
அரச அங்கீகாரம்பெற்ற தனியார் பாடசாலை - 04, ஏனையவை - 05

15. விண்ணப்பதாரியின் வெளிப்பாடு :
என்னால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் சரியானதும் என உறுதிப்படுத்துவதுடன் தற்போது நான் வேறு நிறுவனங்களில் பயிற்சிக்காகப் பங்கேற்கவில்லை என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

................................ .................................................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

16. அதிபரின் பரிந்துரை :
மேலே குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரர் இப்பாடசாலையில் சேவையாற்றுகிறாரென்றும் அவரினால் மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மையானதும் சரியானதும் என்று உறுதிப்படுத்துகிறேன்.

இவ் ஆசிரியரை, ஆசிரியர் பயிற்சிக்காக தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் அவரை அதற்காக விடுவிக்க இணங்குகிறேன்.

................................ .................................................
திகதி அதிபரின் ஒப்பம் மற்றும் பதவி முத்திரை

17. வலயக் கல்விப் பணிப்பாளரின் பரிந்துரை :

இவ் ஆசிரியரை, ஆசிரியர் பயிற்சிக்காக தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் அவரை அதற்காக விடுவிக்க இணங்குகிறேன்.

............................. ....................................................................

திகதி வலயக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை

18. மாகாணக் கல்விப் பணிப்பாளரின் பரிந்துரை :

இவ் ஆசிரியரை, ஆசிரியர் பயிற்சிக்காக தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் அவரை அதற்காக விடுவிக்க இணங்குகிறேன்.

........................... ..................................................................

திகதி மாகாணக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை

**கல்வி அமைச்சு**

ஆசிரியர் கல்லூரிகளில் 2024/2025 ஆசிரியர் கல்விப் பாடநெறியினைத் தொடர்வதற்காக ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்தல்

விண்ணப்பங்களை நிரப்புவதற்காகத் தேவையான ஆலோசனைகள்

1. ஆசிரியர் கல்லூரிகளில் இரு வருட காலப் பயிற்சிப் பாடநெறியினைத் தொடர்வதற்காக கீழ் குறிப்பிடப்பட்ட தகைமைகள் கொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1. அரச சேவை ஆணைக்குழு சபையின் செயலாளர் அல்லது கல்வி சேவைக்குழுவின் செயலாளர் அல்லது மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் ஒப்பமிடப்பட்டுள்ள முறையான நியமனம்பெற்ற அரச பாடசாலைகளில் சேவையாற்றும் பயிற்றப்படாத ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் உதவியாளர்கள்.

1.2. கல்வி அமைச்சில் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளிலுள்ள அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட நியமனத்தைப் பெற்றுள்ள ஆசிரியர்கள்.

1.3. கல்வி அமைச்சினால் பிரிவெனாக் கல்விப் பிரிவில் பதிவு செய்யப்பட்டுள்ள மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள நியமனத்தைக் கொண்ட பிரிவெனா ஆசிரியர்கள்.

1.4. மஹரகம தேசிய கல்வி நிறுவனத்தினால் அமுல்படுத்தப்பட்ட தொலை, பிரின்செட், ஆசிரியர் கல்லூரிகளின் பழைய பாடவிதானம், பட்டதாரி அல்லாத பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கும் ஆசிரியர் பாடநெறியினைத் தொடர்ந்து தோல்வி அடைந்ததாக உரிய ஆசிரியர் பயிற்சிப் பொறுப்பாளர்களினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள ஆசிரியர்கள்.

**2. விசேட ஆலோசனைகள்**

2.1. ஆசிரியர் கல்லூரிகளில் காணப்படும் வெற்றிடங்களுக்கமைய மற்றும் நியமனத்தை அடிப்படையாகக் கொண்டு தேர்ந்தெடுக்கப்படும் ஆசிரியர் சேவையின் பதவி உயர்வின்போது தொழில்சார் தகைமை இன்மையினால் பாதிப்புக்கள் ஏற்படுவது மாத்திரமின்றி பாடசாலைக் கல்வியின் பண்புசார் தரத்தை விருத்தி செய்வதற்கும் தடைகள் ஏற்பட்டுள்ளன. இச்சகல விடயங்களையும் கருத்திற்கொண்டு சகல பட்டதாரி அல்லாத பயிற்றப்படாத ஆசிரியர்கள் பயிற்சியினைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2.2. இப்பாடநெறி இரண்டு வருட கால வதிவிடப் பயிற்சியினைக் கொண்டதுடன், வதிவிட வசதிகள் இல்லாத சந்தர்ப்பங்களில் அதிபரின் எழுத்துமூல அங்கீகாரத்திற்கமைய ஆசிரியர் கல்லூரிக்கு அண்மையில் தனியார் விடுதியில் தங்குவதற்கு அனுமதி வழங்கப்படும்.

2.3. பாடநெறியினை நடாத்துவதற்காகக் காணப்படும் வசதிகளுக்கமைய பாடநெறி நடைபெறும் ஆசிரியர் கல்லூரிகள் தீர்மானிக்கப்படுவதினால் சகல சந்தர்ப்பங்களிலும் அண்மித்த ஆசிரியர் கல்லூரிகளை வழங்க முடியாமல்

போகும். விண்ணப்பப்படிவத்தில் இலக்கம் 05 இனை நிரப்புவதற்காக ஆசிரியர் கல்லூரிகளில் மேற்கொள்ளப்படும் பாடநெறிகள் தொடர்பில் கீழ் குறிப்பிடப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தவும்.

| | ஆசிரியர் கல்லூரி | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பலப்பிட்டி | உணவட்டுன | கிராகம | கம்பொல | கொட்டகல | அட்டாளைச் சேனை | கோப்பாய் | மட்டக்களப்பு |
| மொழி | சிங்களம் | சிங்களம் | சிங்களம் | சிங்களம் | தமிழ் | தமிழ் | தமிழ் | தமிழ் |
| பாடங்கள் | மனைப் பொருளியல் | ஆங்கிலம் | முதல் மொழி சிங்களம் | ஆங்கிலம் | ஆரம்பக் கல்வி | ஆங்கிலம் | ஆங்கிலம் | ஆங்கிலம் |
| | கைத்தறி கைத் தொழில் மற்றும் தொழில் நுட்பம் | ஆரம்பக் கல்வி | நடனம் | | இரண்டாம் மொழி சிங்களம் | உடற்கல்வி | கணிதம் | ஆரம்பக் கல்வி |
| | கிறிஸ்தவ சமயம் | விஞ்ஞானம் | சங்கீதம் | | சித்திரம் | ஆரம்பக் கல்வி | விசேட கல்வி | சமூக விஞ்ஞானம் |
| | உடற்கல்வி | இரண்டாம் மொழி சிங்களம் | சித்திரம் | | ஆலோசனை | இஸ்லாம் | வர்த்தகம் | விஞ்ஞானம் |
| | விசேட கல்வி | கணிதம் | பௌத்த சமயம் | | விவசாயம் | தகவல் தொழில் நுட்பம் (ஆங்கிலம்) | ஆரம்பக் கல்வி | முதல் மொழி தமிழ் |
| | ஆரம்பக் கல்வி | தகவல் தொழில் நுட்பம் (ஆங்கிலம்) | | | இந்து சமயம் | | சங்கீதம் | கிறிஸ்தவ சமயம் |
| | சமூக விஞ்ஞானம் | விவசாய விஞ்ஞானம் | | | நடனம் | | நூலக விஞ்ஞானம் | இரண்டாம் மொழி தமிழ் |
| | நூலக விஞ்ஞானம் | வர்த்தகம் | | | தமிழ் | | கைத்தறி கைத்தொழில் மற்றும் தொழில் நுட்பம் | |
| | ஆலோசனை | | | | | | மனைப் பொருளியல் | |
| | | | | | | | | |

(ஒரு பாடத்திற்கு விண்ணப்பிக்கும் மாணவர் எண்ணிக்கைக்கமைய இப்பாடங்கள் நடைபெறும் ஆசிரியர் கல்லூரிகள் மாற்றம் பெறும் என்பதை கருத்திற் கொள்ளவும்)

2.4. ஆசிரியர் கல்லூரிகளின் ஆசிரியர் பயிற்சிக் காலத்திற்குள் வேறு பாடநெறிகளைத் தொடர்வதற்கு அல்லது ஏனைய வெளிப்பரீட்சைகளுக்குத் தோற்றக்கூடாது. அது தொடர்பில் கிடைக்கும் தகவல்கள் மற்றும் பாடநெறியினை விட்டுவிலகுவது தொடர்பில் முறையான விசாரணைகளுக்குப் பின்னர் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

2.5. ஏதேனும் ஒருவர் ஆசிரியர் கல்லூரியில் பதிவு செய்ததன் பின்னர் உரிய பாடநெறியினை மாற்றியமைக்க அல்லது வேறு கல்லூரிக்கு இடமாற்றம் பெறுவதற்காக விண்ணப்பிக்க முடியாது.

2.6. இப் பாடநெறி கீழ் குறிப்பிடப்பட்ட ஆசிரியர்களுக்கு சம்பந்தப்பட்டதாக அமையாது.

(அ) ஏதேனும் ஒரு ஆசிரியர் கல்லூரியில் ஏற்கனவே பயிற்சிபெறும் அல்லது பயிற்சி பெற்றுள்ள ஆசிரியர்கள்.

(ஆ) பட்டதாரிப் பயிலுனர் ஆசிரியர் நியமனம் அல்லது பட்டதாரி முகாமைத்துவ உதவியாளர் நியமனம் அல்லது அதற்குச் சமமான ஏதேனும் பட்ட நியமனத்தைப் பெற்றுள்ள ஆசிரியர்கள்.

(இ) இங்கு இலக்கம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யாத ஆசிரியர்கள்.

2.7. சகல விண்ணப்பதாரர்களினாலும் கீழ் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் ஆசிரியர் பயிற்சிக்காகப் பதிவு செய்வதற்குக் கோரும் தினத்தில் கையளிக்கப்பட வேண்டும்.

(அ) பூரணப்படுத்தப்பட்ட பிணை முறி

(ஆ) ஆசிரியர் கல்விப் பாடநெறியினைப் பூர்த்தி செய்ததன் பின்னர் நியமிக்கப்படும் பாடசாலைகளின் (அரச ஆசிரியர்கள், அரச பாடசாலைகளில் மற்றும் அரசு அல்லாத ஆசிரியர்கள் உரிய நிருவாக சபையின் கீழ்) தொடர்ச்சியாக 5 வருடங்கள் சேவையாற்றியதாக அரசு அல்லது நிருவாக சபையுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் பிரதி.

2.8. 1982 ஏப்பிறல் மாதத்திற்குப் பின்னர் மாவட்ட சேவை முறையின் கீழ் ஆசிரியர் நியமனத்தைப் பெற்று பயிற்சிக்குட்படுத்தக்கூடியவர்கள் ஆசிரியர் பயிற்சியின் பின்னர் முதல் நியமனம் பெற்ற மாவட்டங்களில் சேவையாற்றக் கட்டுப்பட வேண்டும் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். ஆசிரியர் பயிற்சியினை பூர்த்தி செய்ததன் பின்னர் தாம் சேவையாற்றிய பாடசாலைக்கு அல்லது வலய அலுவலகத்தினால் பெயரிடப்படும் வெற்றிடம் கொண்ட ஏனைய பாடசாலைக்கு மீளச் சமுகமளிக்க வேண்டும். நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட வேண்டும்.

2.9. ஆசிரியர் பயிற்சிப் பாடநெறிக்காக ஆசிரியர் கல்லூரிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் எந்தவொரு பயிற்சியாளருக்கும் தமது விருப்பத்திற்கு ஏற்றவாறு பாடநெறியிலிருந்து விலக முடியாது. அவ்வாறு விலகுவதற்காக விசேட அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் உரிய ஆசிரியர் மாணவரின் அரசின் செலவினத்தை மதிப்பீடு செய்து மிகைக் கட்டணத்துடன் அறவீடுகள் மேற்கொள்ளப்படும்.

2.10. ஏதேனும் ஒரு முறையில் தகைமைகளை பூர்த்தி செய்யாதவர் பாடநெறியில் இணைந்துள்ளதாக அறியக் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் பயிற்சிபெறும் காலமாக இருப்பின் பயிற்சி இரத்துச் செய்யப்படுவதுடன், பயிற்சியின் பின்னராயின் பெயர் அவரின் ஆசிரியர் சான்றிதழ் இரத்துச் செய்யப்படும்.

3. (i) ஆசிரியர் கல்லூரிகளின் அதிபர்களினால் எதிர்பார்க்கப்படும் நிலைமைகளுக்கமைய சமுகமளிக்காமை தொடர்பான பொதுவான செயற்பாட்டு முறைகள் ஆசிரியர் கல்லூரியின் ஒழுக்க நெறிமுறைகளுக்கு ஒப்பீடாகாத சந்தர்ப்பங்கள் இருப்பின் மற்றும் கற்றல் தொடர்பில் ஆர்வம் காண்பிக்கத் தவறும் பட்சத்தில் பயிற்சி பெறுவோர் பாடநெறியிலிருந்து நீக்கப்படுவர். பயிற்சிபெறும் கால எல்லைக்குள் ஆசிரியர் பாடநெறியில் கலந்து கொள்ளல் மற்றும் சமுகமளிப்பு 80% தை விடக் குறைவாக அமையும் பட்சத்தில் ஆசிரியர் கல்லூரி இறுதிப் பரீட்சையில் தோற்றுவதற்குத் தகைமை அற்றவராகக் கருத்தில் கொள்ளப்படும். இருப்பினும் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் விசேட காரணங்களுக்கமைய கல்விச் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

(ii) விடுமுறை :

(அ) நிறுவனப் பயிற்சிக்காக இரண்டு வருடகாலம் முழுமையான சம்பளத்துடன் கற்கை விடுமுறை உரித்தாகின்றது. இக்கற்கை விடுமுறைக் காலத்தைப் பயிற்சிப் பாடநெறியினை தொடர்வதற்காக முழுமையாகப் பயன்படுத்துவது அவசியமாகும். இருப்பினும் ஆசிரியர் பயிற்சியைப் பெறுபவருக்கு அத்தியாவசியம் என அதிபர் திருப்தியடையின் மாத்திரம் ஒரு சில நாட்களுக்கு விடுமுறை பெற முடியும். இதற்காக அதிபரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது. இவ்வாறு பெற்றுக் கொள்ளும் விடுமுறை ஒரு வருடத்திற்கு 10 நாட்களைத் தாண்டாது இருக்க வேண்டும்.

(ஆ) கூடுதலாக விடுமுறை பெறுவதினால் பாடநெறியின் கற்கைச் செயற்பாடுகளில் முன்னேற்றங்கள் திருப்தியற்றது என எவரேனும் பயிலுநர் தொடர்பில் அதிபருக்குத் தகவல் கிடைக்கும் பட்சத்தில் பாடநெறியின் கற்கைச் செயற்பாடுகளை இடைநிறுத்தி மீண்டும் பாடசாலைகளுக்கு அனுப்பப்படுவர். மருத்துவ விடுமுறைகளுக்காக அரச அல்லது அரசினால் பதிவு செய்யப்பட்ட வைத்திய சபையின் வைத்தியரின் சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டும்.

4. ஆசிரியர் கல்லூரியினால் நடாத்தப்படும் தொடர்ச்சியான மதிப்பீடுகள் மற்றும் இரு வருடகால ஆசிரியர் பாடநெறியினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததன் பின்னர் பரீட்சை ஆணையாளரினால் நடாத்தப்படும் இறுதிப் பரீட்சையில் சித்தியடைவோருக்கு ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் வழங்கப்படும்.

5. **சம்பள அளவு**

ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பிற்குரியதாக கடந்த கால மறுசீரமைப்புகளுக்குட்பட்டு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்ப்பு செய்யப்பட்டதன் பின்னர் உரிய சம்பள அளவில் தாபிக்கப்படும்.

6. (i) சகல விண்ணப்பதாரர்களும் தாம் நியமனம்பெற்ற பாடங்களில் ஆசிரியர் பயிற்சியினைப் பெற வேண்டும். இருப்பினும் விசேட கல்விப் பாடநெறிகளுக்கு மாத்திரம் வேறு பாடங்களின் மூலம் நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கும் விண்ணப்பிக்க முடியும். அரசின் நியமனங்களைப் பெற்ற ஆசிரியர்களின் நியமனப் பாடங்கள், நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்படாத சந்தர்ப்பங்களில் தாம் க.பொ.த (உ.த) பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த பாடங்களில் ஆசிரியர் பயிற்சியைப் பெற்றுக் கொள்ள விண்ணப்பிக்க முடியும். இதற்காக உரிய பாடங்கள் கற்பிக்கப்படுவதாக அங்கீகரிக்கப்பட்ட நேரசூசியின் பிரதி நேர்முகப் பரீட்சையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். க.பொ.த (சா.த) தகைமைகளுக்கமைய சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களின் நியமனக் கடிதத்தில் நியமனப் பாடம் குறிப்பிடப்படாத வேளையில் இந்நியமனம் ஆரம்ப ஆசிரியர் நியமனமாகக் கருதப்படும். தனியார் மற்றும் பிரிவெனா ஆசிரியர்களின் நியமனக் கடிதங்களில் பாடங்கள் குறிப்பிடப்படாத வேளைகளில் தாம் கற்பிக்கும் பாடங்களுக்கமைய பயிற்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும். நிறுவனப் பொறுப்பாளரின் ஒப்பத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நேரசூசியின் பிரதியினைச் சமர்ப்பிப்பது அத்தியாவசியமாகும்.

(ii) பயிற்சி வழங்கப்படும் பாடநெறிகள் கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றன.

| | பாடநெறியின் இலக்கம் | பாடநெறியின் பெயர் |
|---|---|---|
| I. | 01 | சிங்களம் |
| II. | 02 | ஆரம்பக் கல்வி |
| III. | 03 | சமூக விஞ்ஞானம் |
| IV. | 04 | விஞ்ஞானம் |
| V. | 05 | கணிதம் |
| VI. | 06 | விவசாய விஞ்ஞானம் |
| VII. | 07 | மனைக் கல்வி |
| VIII. | 08 | ஆங்கிலம் |
| IX. | 09 | பௌத்த சமயம் |
| X. | 10 | கிறிஸ்தவ/ ரோமன் கத்தோலிக்க சமயம் |
| XI. | 11 | இந்து சமயம் |
| XII. | 12 | இஸ்லாம் |
| XIII. | 13 | சித்திரம் |
| XIV. | 14 | சங்கீதம் |
| XV. | 15 | நடனம் |
| XVI. | 16 | அரபு |
| XVII. | 17 | விசேட கல்வி |
| XVIII. | 18 | கைத்தறி கைத்தொழில் மற்றும் தொழில்நுட்பம் |
| XIX. | 19 | வர்த்தகம் |
| XX. | 20 | தமிழ் |
| XXI. | 21 | உடற்கல்வி |
| XXII. | 22 | இரண்டாம் மொழி (சிங்களம்/ தமிழ்) |
| XXIII. | 23 | தகவல் தொழில்நுட்பம் |
| XXIV. | 24 | ஆலோசனை |
| XXV. | 25 | நூலக விஞ்ஞானம் |

7. **தகைமைகள்**

7.1. சகல விண்ணப்பதாரர்களும் கீழ் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

I. தேகாரோக்கியம் கொண்டவராக இருக்க வேண்டும்.
II. இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.
III. சகல விண்ணப்பதாரர்களும் தமது நியமனத் தன்மையினை முதல் நியமனக் கடிதத்தின் ஊடாக உறுதிப்படுத்த வேண்டும்.

8. அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலை ஒன்றில் நிரந்தர ஆசிரியராக செயற்பட்டு பொதுவாக வகுப்புகளில் வாரத்திற்கு 20 மணித்தியாலங்கள் கற்பித்தலை மேற்கொள்ளும் ஆசிரியர்கள் ஊடாக மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையினர் பயிற்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்படுவர்.

8.1. இது தொடர்பில் கீழ் குறிப்பிடப்பட்ட பாடசாலை தனியார்ப் பாடசாலையாகக் கருத்திற் கொள்ளப்படும்.

I. 1951 ஆம் ஆண்டில் கட்டணம் அறவிடும் பாடசாலையாக மாற்றம் பெற்ற உதவி நன்கொடை பெறும் பாடசாலை
II. 1960.12.01 ஆம் திகதியன்று கட்டணம் அறவிடப்படாத தனியார் பாடசாலையாக மாற்றம் பெற்ற பாடசாலைகள்
III. கல்வி அமைச்சினால் (பிரதேச/மாகாணக் கல்விப் பணிப்பாளர் அல்லாத) அங்கீகரிக்கப்பட்டுள்ள தனியார் பாடசாலை மற்றும் பிரிவெனாக்கள்

8.2. தனியார் பாடசாலைகளில் ஆசிரியர்கள் அவர்களின் முதலாவது நியமனக் கடிதம் மற்றும் உரிய ஆசிரியர் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் சபைக்குரியதென உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தினை மாகாண/வலயக் கல்விப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொண்டு நேர்முகப் பரீட்சைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

8.3. பிரிவெனாக்களில் சமர்ப்பிக்கப்படும் ஆசிரியர்களுக்கு 1959 பிரிவெனாச் சட்டம் 1979 இலக்கம் 64 கொண்ட கீழ் குறிப்பிடப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட சேவை இதற்காகக் கருத்தில் கொள்ளப்படும்.

8.4. தற்போது பிரிவெனாக்களிலிருந்து சமர்ப்பிக்கப்படும் ஆசிரியர்களுக்கு விண்ணப்பிக்க முடிவது சிங்களம், விஞ்ஞானம் கணிதம், ஆங்கிலம் மற்றும் பௌத்த சமயம் ஆகிய பாடநெறிகள் மாத்திரமாகும். (நியமனம் பெற்ற பாடத்தின் மூலம் ஆசிரியர் பயிற்சியினைப் பெற்றுக் கொள்ள வேண்டும்) விஞ்ஞானக் கல்வி பிரிவெனாக்களில் கற்பிக்கும் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு மாத்திரம் இதற்கு மேலதிகமாக சங்கீதம், சித்திரம், நடனம், வர்த்தகம், உடற்கல்வி மற்றும் விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடநெறிகளுக்காக விண்ணப்பிக்க முடியும்.

8.5. சகல அங்கீகரிக்கப்பட்ட அரச பாடசாலை ஆசிரியர்கள் நிருவாக சபையின் முகாமையாளர் மூலமும், பிரிவெனா ஆசிரியர்கள் பதிவாளர் மூலமும் கீழ்க் குறிப்பிடப்பட்ட விடயங்களுக் குரியதாக வெளிப்பாட்டுப் பத்திரங்களை நேர்முகப் பரீட்சையில் சமர்ப்பிக்க வேண்டும்.

I. பயிற்சிபெறும் காலத்தில் ஆசிரியராக சேவையிலிருந்து விடுவிக்க முடியும்,
II. பயிற்சிபெறும் காலத்திற்குள் ஆசிரியர்களுக்குச் சம்பளம் செலுத்தப்படுவதாக,
III. பயிற்சியின் இறுதியில் நிருவாக சபையினால் உரிய ஆசிரியர்களை மீளச் சேவையில் ஈடுபடுத்துவதாக.
IV. பயிற்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரிவெனா ஆசிரியர்களுக்காக வேறு ஆசிரியர் கோருவதில்லை என மற்றும் அவரது பணிகள் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் சபைக்கிடையே பகிரப்படுவதாகவும்,

8.6. அரச அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலை மற்றும் பிரிவெனாக்களில் தேர்ந்தெடுக்கப்படும் ஆசிரியர்கள் பயிற்சிக்காக பதிவு செய்வதற்கு முன்னர் "பயிற்சியின் பின்னர் அரச பாடசாலைகளில் தொழில் வாய்ப்பினைக் கோருவதில்லை என" உறுதிப்பத்திரத்தில் ஒப்பமிட வேண்டும்.

8.7. அரச அங்கீகாரம்பெற்ற தனியார் பாடசாலைகளின் ஆசிரியர்கள் மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் ஒப்பமிடப்பட்ட முதல் நியமனக் கடிதத்தைச் சமர்ப்பிக்க வேண்டும். 18 வருடங்களுக்கு முன்னர் நியமனம் பெற்றுள்ள ஆசிரியர்களின் நியமனத்தினம் கணிப்பீடு செய்யப்படுவது 18 ஆண்டுகள் பூர்த்தியடைந்த தினம் தொடக்கமாகும். வேறு உத்தியோகத்தர் இந் நியமனக் கடிதத்தில் ஒப்பமிட்டிருப்பின் உரிய மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் உண்மையானது என உறுதிப்படுத்தியிருக்க வேண்டும்.

9. **ஆசிரியர் கல்விப் பாடநெறியினைத் தொடர்வதற்கு விண்ணப்பித்தல்**

9.1. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய அபேட்சகரினால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து விண்ணப்பிக்க வேண்டும்.

(அ) ஆசிரியர் கல்விப் பாடநெறியினைத் தொடர்வதற்கு எதிர்பார்க்கும் மொழிமூலம் விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

(ஆ) மாதிரிப்படிவம் 8" x 12" (A4) கடதாசியின் இரு பக்கங்களிலும் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(இ) எந்தவொரு பகுதியினையும் மாற்றிமைக்கவோ அல்லது அகற்றவோ கூடாது.கூடுகளிற்கிடையில் இடைவெளி இருக்க வேண்டியதுடன் ஒன்றுடன் ஒன்று அவை இடைச் செருகல் அடையக்கூடாது.

9.2. விண்ணப்பதாரியினால் விண்ணப்பப்படிவத்தை குறைவின்றி மற்றும் சரியாகப் பூரணப்படுத்த வேண்டும். உரியவாறு பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். கீழ்குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் விணணப்பதாரியின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(அ) சகல விண்ணப்பதாரர்களும் தமது பெயரை நியமனக் கடிதத்தில் உள்ளவாறு குறிப்பிட வேண்டும்.

(ஆ) சகல விண்ணப்பதாரர்களும் தமது விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் போது கீழ்க் குறிப்பிட்ட ஆவணங்களில் உறுதிப்படுத்தப்பட்ட போட்டோப் பிரதியை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.

9.1. நியமனக் கடிதம்
9.2. தேசிய அடையாள அட்டை
9.3. முதல் நியமனக் கடிதத்திற்கமைய கடமையைப் பொறுப்பேற்ற முதற்தினத்தை உறுதிப்படுத்துவதற்காக அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட பதவி முத்திரையுடன் லொக் குறிப்பின் பிரதி.
9.4. கல்வி மற்றும் தொழில்சார் தகைமை தொடர்பான சான்றிதழ்.
9.5. பதிவு செய்ததன் பின்னர் இலங்கையின் பிரஜாவுரிமை பெற்றிருப்பின் அது தொடர்பில் உறுதிப்படுத்தும் ஆவணம்.

(இ) விண்ணப்பப்படிவத்தை தமது பாடசாலை அதிபர் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்.

(ஈ) குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கமைய தயாரிக்கப்பட்ட சகல விண்ணப்பப் படிவம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கமைய தயாரிக்கப்பட்ட கடித உறையில் இட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் "**ஆசிரியர் கல்லூரியின் ஆசிரியர் கல்விப் பாடநெறியினைத் தொடர்வதற்காக ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்தல் - 2023/2024**" என்றும் பாடநெறி, மொழி மற்றும் வலயத்தைக் குறிப்பிட்டு 2024.08.30 அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் கல்விப் பணிப்பாளர், ஆசிரியர் கல்வி நிருவாகக் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்ப வேண்டும்.

விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பிலான கடிதம் தபாலில் காணாமல் போதல் தொடர்பான முறைப்பாடுகள் தொடர்பில் கருத்திற் கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் போது தாமதம் மூலம் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் விண்ணப்பதாரியினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

பதிவுத் தபால்

"ஆசிரியர் கல்லூரியின் ஆசிரியர் கல்விப்
பாடநெறியினைத் தொடர்வதற்காக ஆசிரியர்களைத்
தேர்ந்தெடுத்தல் - 2023/2024"

பாடநெறி :..........................
மொழி :..........................
வலயம் :..........................

கல்விப் பணிப்பாளர்,
ஆசிரியர் கல்வி நிருவாகக் கிளை,
கல்வி அமைச்சு,
இசுருபாய, பத்தரமுல்ல.

(உ) தாமதித்துக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

i. விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றதாக அறிவிக்கப்படமாட்டாது.
ii. ஆசிரியர் கல்லூரிக்கு அழைக்கும்போது சகல சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களின் முதற்பிரதி மற்றும் உறுதி செய்யப்பட்ட நிழற்பட பிரதிகளைச் சமர்ப்பிக்கத் தயாராக இருக்க வேண்டும்.

10. "ஆசிரியர் கல்லூரியின் ஆசிரியர் கல்விப் பாடநெறியினைத் தொடர்வதற்காக ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்தல் - 2024/2025" என கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

11. இவ் அறிவித்தலில் சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழிக்கிடையே ஒப்பீடுகள் இல்லாத சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல வாசகம் அமுலில் இருக்கும்.

ஜே. எம். திலகா ஜயசுந்தர,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

07-371

## பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

### இலங்கை தொழில்நுட்பச் சேவையின் I ஆம் வகுப்பு அலுவலர்களை விசேட வகுப்புக்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2021/ 2022/ 2023

2015.09.01 ஆந் திகதிய 1930/ 12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புக்கு இணங்க இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் I ஆம் வகுப்பில் இருந்து விசேட வகுப்புக்கு இணைத்துக் கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் கீழ் தரமுயர்த்துவதற்காக நடாத்தப்படும் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2024, நவெம்பர் மாதம் கொழும்பில் நடாத்தப்படும். இப்பரீட்சையை தாமதப்படுத்துவதற்கும் இரத்துச் செய்வதற்கும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆலோசனையின் கீழ் அரசாங்க நிர்வாகச் செயலாளருக்கு அதிகாரமுண்டு.

விண்ணப்பம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.donets.lk இணைத்தளத்தின் "our services" கீமுள்ள "Online Application – Recruitment Exam/ E. B. Exams" ஊடாக வெளியிடப்பட்டுள்ளதுடன் விண்ணப்பங்களை நிகழ்நிலை (Online) மூலமே சமர்ப்பிக்கலாம். நிகழ்நிலை விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளும் 2024, யூலை மாதம் 15 ஆந் திகதி மு. ப. 9.00 க்கு திறக்கப்படும் என்பதுடன் 2024, ஓகத்து மாத 15 ஆந் திகதி இரவு 9.00 க்கு முடிவடையும். விண்ணப்பப்படிவத்தினை நிகழ்நிலையினூடாக அனுப்பிய பின்னர் அதனை தரவிரக்கம் செய்து, நகல் எடுக்கப்பட்ட பிரதியில் தேவையான பகுதிகளை கையால் நிரப்பி விண்ணப்பதாரியின் கையெழுத்தினை சான்றுரைப்படுத்தி, உரிய திணைக்கள தலைவரின் சான்றுரையுடன் மத்திய அரச சேவையிலுள்ள அலுவலர்கள் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாகவும், மாகாண அரச சேவையிலுள்ள அலுவலர்கள் அவர்கள் பணிபுரியும் மாகாண சபையின் அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் ஊடாகவும், விண்ணப்பங்களை ஏற்கும் இறுதி தினத்திற்கு அல்லது அதற்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம் நிறுவன பரீட்சை ஒழுங்கமைப்பு கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு என்ற முகவரிக்கு பதிவு தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை பெறும் இறுதி தினத்திற்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

02. 2021.12.31 ஆந் திகதியன்று 2022.12.31 அல்லது 2023.12.31 தினத்தன்று

அல்லது

மேற்கூறப்பட்ட இரு தினங்களுக்கோ

அல்லது

மேற்கூறப்பட்ட மூன்று தினங்களுக்கோ

அல்லது

(i) இலங்கை தொழில்நுட்ப சேவையின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் சேவை வகுதியின் I ஆவது தரத்தில் ஆகக்குறைந்தது (5) வருட முனைப்புடனான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்திசெய்து உரிய சம்பள ஏற்றங்கள் (5) இனைப் பெற்றுக்கொண்டுள்ள,

(ii) அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சபை சுற்றறிக்கைகள் 01/ 2020 இல் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுக்காற்று தண்டனையொன்றை பெறாத,

(iii) மூன்றாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியெய்தியுள்ள அலுவலர்கள் இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமையைப் பெறுவார்கள்.

03. விசேட வகுப்பு அலுவலர்கள் தொடர்பில் கீழே தரப்பட்டுள்ள சம்பளத் திட்டம் செல்லுபடியாகும்.

(MN-7-2016 4 ஆம் படிமுறை) ரூபா 43,845.00- 8 × 755- 18 × 1,030 - ரூபா 68,425.00

04. இலங்கை தொழில்நுட்ப சேவையின் வகுப்பு I இல் இருந்து விசேட வகுப்பிற்கான தரமுயர்வு பின்வரும் வகையில் மேற்கொள்ளப்படும் :

(i) **இணைத்துக்கொள்ளப்படும் சதவீதங்கள் :**
மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் 40%
சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையில் 60%

(ii) அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 04 ஆகக் காணப்படுமிடத்து மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் வெற்றிடங்கள் நிரப்பப்படும் சதவீதம் 25% ஆகவும், சேவை மூப்பு மற்றும் திறமையின் அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்படும் சதவீதம் 75% ஆக இருக்க வேண்டியிருப்பதோடு, அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 03 ஆக இருக்கும்போது மேற்படி மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் நிரப்பப்படும் வெற்றிடங்களின் சதவீதம் 33.33% மற்றும் சேவை மூப்பு மற்றும் திறமையின் அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்படும் சதவீதம் 66.66% ஆகவும் இருக்க வேண்டும் ;

(iii) இலங்கை தொழில்நுட்ப சேவையின் விசேட தரத்திற்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை 04 ஐ விட அதிகமாக இருப்பின், மேற்படி 04.i ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வீதத்தின் கீழ் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் வெற்றிடங்கள் நிரப்பப்படல் வேண்டும் ;

(iv) பொது நிருவாக அமைச்சின் செயலாளருக்குப் பதிலாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் விசேட வகுப்பிற்கு தரமுயர்த்துவதற்கான

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை யின் பெறுபேறுகளின் அடிப்படையில் அதில் சித்தியடைபவர்கள் அதனுடன் தொடர்புபட்ட ஏனைய தேவைகளையும் பூரணப்படுத்தப்பட்டதாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் தேர்வுக் குழுவினால் தகைமைகள் பரீட்சிக்கப்படும் தேர்வின் மூலம் திகதிகள் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் பரீட்சையின் திறமைகளின் ஒழுங்கில் மற்றும் நிரப்பப்படவேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக் கைக்கு ஏற்ப பரீட்சை நடைபெற்ற தினத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்படும் வகையில் விசேட வகுப்பிற்கான பதவியேற்றம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்படும்.

(v) வெற்றிடங்களை நிரப்பும் போது தேர்வு முடிவுகள் ஒவ்வோர் ஆண்டுகளிலும் நடைபெற்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை நிரப்புவதற்கு உரித்தாக்கப்படும். அங்கு, ஒவ்வோர் வருடங்களிலும் நடைபெற்ற வெற்றிடங்கள் ஏற்பட்ட தினங்களுக்கு தகைமை பெற்ற அலுவலர்கள் பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவதோடு விசேட தரத்திற்கு தரமுயர்த்தல் நடைபெறும் தினமாக கருதப்படுவது பரீட்சை நடைபெற்ற தினமாகும்.

(vi) விசேட தரத்திற்கு தரமுயர்த்துவதற்காக மட்டுப் படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் முடிவுகள் உரித்தாக்கப்படவேண்டியது 2021, 2022 மற்றும் 2023 வருடங்களில் நடைபெறும் வெற்றிடங்களின் எண்ணிக்கை நிரப்புவதற்கு மட்டுமாகும் ;

(vii) இப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இலங்கைத் தொழில்நுட்ப சேவையில் விசேட தரத்தின் 2021.01.01 ஆந் திகதியிலிருந்து 2021.12.31 ஆந் திகதி வரையிலான மற்றும் 2022.01.01 ஆந் திகதியிலிருந்து 2022.12.31 ஆந் திகதி வரையில் மற்றும் 2023.01.01 ஆந் திகதியிலிருந்து 2023.12.31 ஆந் திகதி வரையிலான ஒவ்வொரு திணைக்களங்களிலும் மற்றும் அமைச்சுக்களிலும் அவ் அவ் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்கள் நிரப்பப்படும் ;

05. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்** :

பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்று கின்ற ஒவ்வொரு பாடத்திலும் மேற்பார்வை யாளர் திருப்தியடையக்கூடிய வகையில் தமது ஆளடை யாளத்தை விண்ணப்பதாரர்கள் உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) தேசிய ஆளடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்ள முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் நுழைதல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை நிரூபிக்க மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தது முதல் பரீட்சை முடிவடைந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் கண்டு கொள்ள முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

06. **விண்ணப்பப்படிவம்** :

(i) நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப்படிவம் ஆங்கில மொழியில் மாத்திரம் பூர்த்தி செய்தல் வேண்டும். விண்ணப்பதாரியினால் நிகழ்நிலை யினூடாக செய்யப்படும் மென்நகல் மற்றும் பதிவுத்தபாலின் மூலம் அனுப்பப்பட்ட பிரதி நகல் ஆகிய இரண்டினையும் பரீட்சைகள் திணைக் களத்திற்கு கிடைத்த பின்பு அவ்மென்நகல் மற்றும் பிரதி நகலினை உறுதிப்படுத்தல் (verify) செய்யப்படுவதோடு, செல்லுபடியாகும் விண்ணப்பப்படிவம் என திணைக்களத் தினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளதென/ பொறுப் பேற்கப்படவில்லையென முறைமைக்குள் உட் செல்வதற்கு பயன்படுத்தும் கைத்தொலைபேசி இலக்கத்திற்கு குறுந்தகவலொனறின் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் (E-mail) விலாசத்திற்கு அறியத்தரப்படும். நிகழ்நிலை விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்காக விண்ணப்பம் செய்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள வழிகாட்டல்களை (instructions) தரவிறக்கம் செய்க. விண்ணப்பங்களை பூர்த்தி செய்கையில் அவ் வழிகாட்டல்களை கட்டாயமாக பின்பற்றலாம். விண்ணப்பப்படிவத்தின் நகல் பிரதியொன்றை பெற்றுக்கொண்ட பின்பு அதில் செய்யப்படும் எவ்வித திருத்தமும் செல்லுபடியான திருத்தமாக கருதப்படமாட்டாது. பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப் படும் விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ii) பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள மொழி மூலத்தில் மாற்றங்கள் செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். இப்பரீட்சைக்காக சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழி மூலங்களிலும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பங்கள் கிடைக்குமிடத்து அம் மூன்று மொழி மூலங்களிலும் பரீட்சை நடாத்தப்படும் பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழி மூலத்தில் விடையளித்தல் வேண்டும்.

(iii) முதற் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சைக் கட்டணம் எதனையும் செலுத்தவேண்டிய அவசியம் இல்லை. எவ்வாறா யினும், அடுத்தடுத்த சந்தர்ப்பங்களில் அலுவலர்கள்

பரீட்சைக்கு தோற்றுவார்களாயின் பரீட்சை கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணம் செலுத்தும் நிகழ்நிலை முறைமையில் பெற்றுக்கொடுக்கும் கீழ்வரும் கொடுப்பனவுகள் செலுத்தும் செயன் முறையின் கீழ் மட்டும் செலுத்துதல் செய்யப்படல் வேண்டும்.

❖ எந்தவொரு வங்கியினதும் கடன் அட்டை (Any Bank Credit Card)

❖ இணைய கொடுப்பனவு வசதியுடைய எந்தவொரு வங்கியினதும் பற்று அட்டையின் மூலமும் (Any Bank Debit Card with the facility of Internet Transactions)

❖ இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறையினூடாக (Online Banking Method of Bank of Ceylon)

❖ ஏதாவது இலங்கை வங்கியின் கிளையினூடாகவும் (Any Branch of Bank of Ceylon)

(அ) மேற்கூறப்பட்ட முறையினூடாக பணம் செலுத்தும் முறை தொடர்பில் அறிவுரைகள் இணையத்தளத்தில் உரிய தொழில்நுட்ப அறிவுரைகளின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) பணம் செலுத்தப்பட்டதென குறுஞ் செய்தி (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் தகவலொன்றின் மூலம் தெரியப்படுத்தப்படும். பரீட்சை கட்டணத்திற்கான முழுமையான தொகையை செலுத்த வேண்டியதுடன், பரீட்சை கட்டணம் குறைவாகவோ அல்லது அதிகமாக செலுத்தியுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்கூறப்பட்ட செலுத்துகை முறை மூலம் பரீட்சை கட்டணங்களை செலுத்தும் போது ஏற்படும் குறைகள் தொடர்பில் இலங்கை பரீட்சை திணைக்களம் பொறுப்பேற்காது.

07.

(i) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உடையவர்கள் மட்டும் விண்ணப் பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க கணிப்பின்படி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் குறித்துரைக்கப்பட்டிருப்பின் குறித்த பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மொழி மூலம், உள்வாங்கப்பட்டிருக்கும் அரசாங்க சேவை, விண்ணப்பதாரியின் கையொப்பம் மற்றும் கையொப்பத்தினை உறுதிப்படுத்தலும், திணைக்களத் தலைவரின் பரிந்துரையும் அத்தாட்சிப்படுத்தலுடனும் திருத்தமாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப் பத்திரம் வெளியிடப்படும். பரீட்சைக்கு விண்ணப் பித்த அலுவலர்கள் அனைவருக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரத்தை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள். அவ்வாறே பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதன் மூலம் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளதாக ஏற்றுக்கொண்டதாகக் கருதுதல் கூடாது.

(ii) விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் அனுப்பப்பட்டதன் பின்னர் அது தொடர்பாகக் குறிப்பிட்டு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் செய்தித்தாள்களிலும் திணைக்கள உத்தியோகபூர்வ இணையதளத்திலும் அறிவித்தல் ஒன்று பிரசுரிக்கப்படும். அவ்வறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 2 அல்லது 3 நாட்களின் பின்னர் அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாதுவிடின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சை ஒழுங்கமைப்பு கிளையிடம் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு தெரியப்படுத்துமிடத்து விண்ணப்பதாரி தாங்கள் விண்ணப்பித்துள்ள பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றினையும் திருத்தமாகக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவராக இருப்பின் மேலுள்ள விபரங்களுடன் தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்றினை விரைவாகப் பெற்றுக்கொள்ள முடியுமான வகையில் விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்தினைக் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதமொன்றினை அறிவித்தலில் குறிப்பிட்ட தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி விசாரணை செய்வது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு விசாரணை செய்யும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் ஏதாவதொரு தகவலினை உறுதிப்படுத்துவதற்காக தாங்களிடம் வைத்துக்கொண்ட விண்ணப்பத்தின் பிரதியை, பரீட்சைக் கட்டணம் செலுத்தல் குறித்து ரைக்கப்பட்டிருப்பின் அது குறித்த பற்றுச்சீட்டின் பிரதியை அல்லது விண்ணப்பப்படிவத்தினை தபால் செய்யும்போது பதிவு செய்த பற்றுச் சீட்டினைத் தயார்படுத்தி வைத்திருப்பது பிரயோசனமாக அமையும்.

(iii) விண்ணப்பப்படிவத்திலும், பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் பரீட்சார்த்தியின் கையொப்பம் திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும். பரீட்சார்த்தி ஒருவர், பரீட்சை மண்டபத்தில் தமக்குரிய இலக்கத்தின்கீழ் பரீட்சைக்குத்

தோற்ற வேண்டியுள்ளதுடன், பரீட்சை நடைபெறும் தினத்தன்று தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

*08.* மேலே (07) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யத் தவறும் பரீட்சார்த்திகளால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

*09.* **பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுதல்.**- இப்பரீட்சையின் பெறுபேறுகள் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுச் செயலாளரினால் வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

*10.* **பரீட்சை நடைமுறைகள்.**- இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(i) I ஆம் வகுப்பிலுள்ள அலுவலர்களை விசேட வகுப்புக்கு தரமுயர்த்துவதற்கான பரீட்சை 02 வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும் :-

(1) *உளச்சார்புப் பரீட்சை.*- நேரம்: 1 மணித்தியாலம் - 100 புள்ளிகள்

(2) *முகாமைத்துவம்.*- நேரம் : 3 மணித்தியாலம் - 100 புள்ளிகள்

தகுதிபெறுவதற்கு ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

முதலாம் வினாப்பத்திரத்திற்கான பாடத்திட்டம் வருமாறு :

***உளச் சார்பு-பாட இலக்கம் (1) :***

தனக்கு ஒப்படைக்கப்படும் கடமைகள் சாதாரண செயலாற்றுகை மட்டத்தினைத் தாண்டிய செயற்திறனைக் கொண்டதாக நிறைவேற்றுவதற்காக தேவைப்படும் அறிவு, ஆற்றல் மற்றும் மனோநிலை என்பவற்றினை பெற்றிருக்கின்றனரா என்றும் அவற்றினைப் பிரயோகித்தலின் போது உச்ச திறமையினைக் காட்டுகின்றனரா எனவும் அளவிட்டுப் பார்க்கும் ஒரு பரீட்சிப்பாகும். பல்தேர்வு மற்றும் சுருக்க விடை அளிப்பதற்கான அமைப்பினைக் கொண்ட 50 வினாக்களை யுடையதாகக் காணப்படுவதுடன் சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

இரண்டாம் வினாப்பத்திரத்திற்கான பாடத்திட்டம் வருமாறு :

***முகாமைத்துவம்-பாட இலக்கம் (2) :***

(i) முகாமைத்துவம் பற்றிய அடிப்படைக் கோட்பாடுகள்

(ii) முகாமைத்துவ தொழிற்பாடுகள் :
- திட்டமிடல்
- தீர்மானங்கள் எடுத்தல்
- தீர்மானங்களை எடுக்கும் செயன்முறை
- ஒழுங்கமைப்பு
- பதவிநிலைப்படுத்தல்
- செயற்படுத்துதல்
- ஊக்குவிப்புச் செயன்முறை
- தலைமைத்துவம்
- நிர்வாகம்
- நிர்வாகக் கொள்கைச் செயன்முறை

(iii) பங்குபற்றல் முகாமைத்துவம்

(iv) முகாமைத்துவச் சூழல்

(v) விடய ஆய்வு

இது ஒரு கட்டமைப்பு வினாப்பத்திரமாகும். இதில் எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

*11.* பரீட்சையினை நடாத்துதல் தொடர்பாகவும் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். மேற்படி சட்டவிதிகளை மீறின், அவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாவார். இவ்வறிவித்தலுக்கு உரித்துடைய நிபந்தனைகளுக்கு ஏற்ப யாதேனுமொரு பரீட்சார்த்தி அப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியற்றவர் எனக் காணுமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் அல்லது அதற்குப் பின்னர் அல்லது எச்சந்தர்ப்பத்திலும் அவருடைய பரீட்சார்த்த தன்மை இரத்துச் செய்யப்பட முடியும்.

*12.* இவ் அறிவித்தலில் ஏற்பாடுகள் காணப்படாத யாதேனும் விடயங்கள் இருப்பின் அவை தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாக அமையும்.

*13.* இவ்வர்த்தமானி அறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி வாசகங்களுக்கிடையில் யாதேனும் இணக்கப்பாடின்மை காணப்படுமாயின் அப்போது சிங்கள மொழியிலுள்ள வாசகமே செல்லுபடியானதாகும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

பிரதீப் யசரத்ன,
செயலாளர்,
பொது நிருவாக, உள்நாட்டலுல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண
சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2024, யூலை 04.

07-380

## இலங்கை - ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் மொரட்டுவை

### கல்வி அமைச்சு

*திறன்கள் அபிவிருத்தி, தொழில்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவு*

### தேசிய தொழில் பயிலுநர் திட்டத்தின் கீழ் முழுநேர பயிற்சி நெறிக்கான அனுமதி - 2024

இலங்கை-ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் கீழ்க்காணும் ஆகக்குறைந்த தகைமைகளையுடைய ஆண்/ பெண் இருபாலாரிடமிருந்தும் 2024 ஆம் ஆண்டு அனுமதிக்காக பயிலுநர் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தேவையான ஆகக்குறைந்த தகைமைகள்** :

01. (அ) **வயது** : 2024.08.04 ஆந் திகதியன்று 16 வயதிற்கும் 22 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) **கல்வித்தகைமை** : க. பொ. த. (சா./த.) பரீட்சையில் தமிழ் அல்லது சிங்களம் (போதனா மொழி), கணிதம் உட்பட 06 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

இலண்டன் சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலமொழி, கணிதம் உட்பட 06 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**விசேட திறமை**:

மின்னியல்/ இலத்திரனியல்/ இயந்திரவியல் துறைகளில் புதிய கண்டுபிடிப்புகளில் ஈடுபட்டு தேசிய/ மாகாண மட்டத்தில் இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட முதல் மூன்று இடங்களில் ஒன்றினை பெற்ற சான்றிதழுடன் (ஆ) கல்வித்தகைமையினை இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) தேசிய தொழில் பயிலுநர் தொழிற்பயிற்சி அதிகார சபையில் 03 அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்களுக்கான பயிற்சியினைப் பெறுவோர் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையோர் அல்லர்.

02. **பயிற்சி போதனை மொழி மூலம்**: எல்லா பாடநெறிகளும் சிங்களத்தில் நடாத்தப்படுவதோடு, மோட்டார் இயந்திரவியல் பாடநெறி மாத்திரம் தமிழிலும் நடத்தப்படும். கோட்பாட்டு வகுப்புக்கள் ஆங்கில மொழியில் நடைபெறும்.

03. **நுழைவுத்தேர்வு**: மேற்குறிப்பிட்ட தகைமைகளையுடைய, கீழே 04 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக் கட்டணங்கள் செலுத்திய விண்ணப்பதாரி மட்டும் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(அ) பரீட்சைக்கான மொழி : தமிழ்/சிங்களம்

(ஆ) பரீட்சை நிலையம் : அனுமதிக்கான எழுத்துமூல பரீட்சை கொழும்பு, கண்டி, காலி, பதுளை, அநுராதபுரம், கிளிநொச்சி ஆகிய பரீட்சை நிலையங்களில் நடைபெறும். (போதியளவு பரீட்சார்த்திகள் இல்லாத நிலையங்களில் பரீட்சை இரத்துச் செய்யப்பட்டு அவர் விரும்பும் வேறு பரீட்சை நிலையத்தில் பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவர்.)

**எழுத்துமூலப் பரீட்சை**:

கணிதம், அடிப்படைத் தொழில்நுட்ப அறிவு, தொழில்நுட்ப வரைபு, நுண்ணறிவு, பொதுஅறிவு ஆங்கிலம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட 02 வினாப்பத்திரங்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

04. **பரீட்சைக் கட்டணம்**:

விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள முறையின் படி ரூபா 1,000 செலுத்தப்பட வேண்டும். இதை தவிர வேறு எந்த முறை கொடுப்பனவும் ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.

அனுமதிப் பரீட்சைக்குத் தோற்றாத காரணத்தினாலோ அல்லது வேறு எந்தக் காரணத்தினாலோ பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதை விசேடமாக கவனத்திற்கொள்க.

05. **ஆரம்பத் தேர்வு முறை**:

எழுத்துமூலப் பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறுபவர்கள் மத்தியிலிருந்து திறமை அடிப்படையில் தகைமையுடையவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். பின்தங்கிய மாவட்டங்களின் வெட்டுப்புள்ளி குறைக்கப்பட்டுள்ளது. (இவ் வெட்டுப்புள்ளி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடைமுறைக்கேற்ப தீர்மானிக்கப்படும்.)

06. **இறுதித் தேர்வு முறை**:

நேர்முகப்பரீட்சைக்கு முன்பதாக செயல்முறைப் பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப்படுவர். செயல்முறைப் பரீட்சையின் 40% உம், நேர்முகப் பரீட்சையின் 60% உம், புள்ளிகளாக வழங்கப்படும். விளையாட்டு போன்ற சிறப்புத் தகைமைகள் இருந்தால் அவைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படுவோர் வைத்திய பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். இதில் சித்தியடையாதோர் பயிற்சியிலிருந்து நீக்கப்படுவர்.

07. **பயிற்சி நெறி**

| இல. | பயிற்சிநெறி | பயிற்சிக் காலம் (ஆண்டுகள்) |
|---|---|---|
| 01 | மோட்டார் இயந்திரவியல் தொழில்நுட்பவியலாளர் (Automobile Technician) | 04 |
| 02 | மில்றைற்/வார்ப்பியல் தொழில்நுட்பவியலாளர் (Millwright Technician) | 04 |
| 03 | காற்று பதனமாக்கல்/குளிரூட்டல் தொழில்நுட்பவியலாளர் (Refrigiration & Air Conditioning Technician) | 03 1/2 |
| 04 | வலு மின்னியல் தொழில்நுட்பவியலாளர் (தொழில்துறை) Power Electrical Technician (Industrial) | 03 1/2 |
| 05 | ஆயுத இயந்திரவியல் (பொது) (Machinist (General) ) | 03 1/2 |
| 06 | மெக்காற்றோனிக் தொழில்நுட்பவியலாளர் (கைத்தொழில்) (Industrial Mechatronic Technician) | 03 1/2 |
| 07 | டீசல் பொறிமுறையாளர் (Diesel Mechanic) | 03 |
| 08 | வாகன மின்னியல் வல்லுநர் (Automobile Electrician) | 03 |
| 09 | உருக்கியிணைத்தல் (Welder) | 03 |
| 10 | வாகன உடல் திருத்துதலும் வர்ணம் தீட்டுதலும் (Motor Vehicle Body Repairer & Painter) | 03 |

விண்ணப்பப்படிவத்தில் தங்களுக்கு விருப்பமான பாடநெறிகளை விருப்பின் அடிப்படையில் பட்டியல்படுத்தவும்.

8. **பிணை முறிகைச்சாத்திடல்**: 04, 03 1/2, 03 வருட பயிற்சிக்கு தெரிவு செய்யப்படுவோர் எமது நிறுவனம் மற்றும் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையுடன் பயிற்சியினை திருப்திகரமாக பூர்த்தி செய்வேனென உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும்.

9. **விண்ணப்பிப்பதற்கான அறிவுரைகள்**: எல்லா விண்ணப்பதாரிகளும் நிகழ்நிலையில் மட்டும் (online system) விண்ணப்பிக்க வேண்டும்.

நிகழ்நிலையில் (online system) விண்ணப்பம் நிரப்பும் போது முழுவதும் ஆங்கில மொழியில் நிரப்ப வேண்டும். கீழே உள்ள முகவரி மூலம் நிகழ்நிலையை (online system) செயற்படுத்த முடியும்.

https://germantec.lk/index.php/register-now/

தொழில்நுட்ப விசாரணை – 0701 640 650 – ருச்சிர ரணசிங்க

நிகழ்நிலையில் (online system) விண்ணப்பிக்க முன்னர் இணையத்தளத்தில் உள்ள விதிமுறைகளை பின்பற்றி விண்ணப்பிக்கவும்.

மேலே தரப்பட்ட அறிவுறுத்தல்களை கவனத்தில் கொள்ளாமல் விண்ணப்பதாரிக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு நிறுவனம் எந்தப் பொறுப்பும் ஏற்றுக்கொள்ள மாட்டாது.

வழங்கப்படும் தரவுகள் பொய்யானது எனத் தெரியவந்தால் பயிற்சியிலிருந்து நீக்கப்படுவர் என்றும் பின்னர் எந்த பரீட்சையிலும் தோற்ற முடியாமல் போகும்.

மேலதிக விபரங்களுக்கு www.germantec.lk என்ற இணையத்தளத்திற்கு பிரவேசிக்கவும்.

10. **விண்ணப்ப முடிவுத் திகதி** :

இலக்கம் 9 இல் உள்ள இணைப்பில் உள்ள அறிவுரைகளை பின்பற்றி 2024.08.04 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் நிகழ் நிலையில் (online system) விண்ணப்பித்து நிறைவு செய்ய வேண்டும்.

11. **பரீட்சை அனுமதிப்பத்திரம்**:

தகைமையுள்ள பரீட்சார்த்திகளுக்கு 2024.08.26 ஆந் திகதியளவில் பரீட்சை அனுமதிப் பத்திரம் அனுப்பிவைக்கப்படும். மேற்படி பத்திரம் கிடைக்கப் பெறாதோர் இத்தினத்திலிருந்து 03 நாட்களுக்குள் கீழேயுள்ள தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்புகொள்க.

முகாமையாளர் - மனித வளமும் நிர்வாகமும்.
இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம்,
இல. 582, காலி வீதி, கல்கிசை,
(அங்குலானை சந்திக்கு அருகில்)
தொலைபேசி – 011 – 2605625/011 - 2605535.

07-577

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.